முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 12—10—56 | வெள்ளி | ஒலி 27



பொழுதுபோக்கு

'டெமாஸ்தனிஸ்'

பிளாக்பூல் நகரில் பிரிட்டிஷ் தொழிற் கட்சி மாநாடு வெற்றிகரமாக முடிந்திருக்கிறது. ஆண்டுதோறும் நடக்கின்ற மாநாடுதான் ஆனாலும், இரண்டு பெரும் நெருக்கடிகளை பிரிட்டன் எதிர்நோக்கி யிருக்கும் நேரத்தில் கூடியது. ஒன்று பிரிட்டனைத் திணற வைத்துக் கொண்டிருக்கும் சூயஸ் பிரச்சினை; மற்றொன்று பிரிட்டனில் ஏற்பட்டிருக்கும் மிகப்பெரிய பொருளாதாரச் சீர்குலைவு.

இந்த இரண்டு நிலைக்கும் சர். அன்டனி ஈடனின் தலைமையில் ஆட்சி நடத்தும் கன்சர்வேடிவ் கட்சியே முழுப் பொறுப்பாளி என்பதைச் சுட்டிக்காட்டி பலமாகக் கண்டித்திருக்கிறது, தொழிற்கட்சி மாநாடு. இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில், வன்முறையால் சூயஸ் பிரச்சினைக்கு முடிவு காண விழையும் பிரிட்டிஷ் பிரதமர் ஈடனின் உளுத்துப் போன அரசியலை பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் 'கூச்' எள்ளி நகையாடி இருக்கிறார். உள்நாட்டு விவகாரங்களில்—குறிப்பாகப் பொருளாதார முனையில்—கன்சர்வேடிவ் கட்சியின் தோல்வியை ஆதார பூர்வமாகப் புள்ளி விவரங்களோடு விளக்கி இருக்கிறார், பார்லிமெண்டரி (தொழிற்கட்சித்) தலைவரும், சிறந்த பொருளியல் நிபுணருமான கெயிட்ஸ்கல்.

இந்த மாநாட்டில் விசேஷம் என்னவென்றால், தொழிற் கட்சியிலுள்ள இடது சாரிகளான பெவான் கோஷ்டியினரும், வலது சாரிகளான (மிதவாதிகள்) கெயிட்ஸ்கல் கோஷ்டியினரும், வேற்றுமைகளை மறந்து குறைந்த பட்ச அடிப்படைத் திட்டத்தில் ஒன்றுபட்டுள்ளனர். தொழிற் கட்சி அரசியலிலிருந்து மாரிஸன், ஆட்லி போன்ற வலது சாரித் தலைவர்கள் முதுமையின் காரணமாக விலகியவுடனேயே, பிரிட்டிஷ் தொழிற் கட்சியில் வேற்றுமை மறைந்து, ஒற்றுமை வளர்ந்து வருவது நம் நாட்டுப் பெரியார்கள் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்!

* * *

ஜனநாயக அரசியலின் பிறப்பிடம் பிரிட்டன்! சுய நலத்துக்காகக் கட்சியின் கௌரவத்தையும், நாட்டின் நலத்தையும் காற்றில் பறக்கவிடும் 'கண்ணியவான்கள்'—இங்குள்ளது போல் அங்கில்லை. இந்த ஒரு சம்பவத்தைப் பாருங்கள். ஆட்லியின் தலைமையை மதிக்காமல் சில ஆண்டுகளுக்குமுன் பெவான் பார்லிமெண்டில் பேசி விட்டார். தொழிற்கட்சி நிர்வாகக் குழு அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஒரு விசாரணைக் குழு அமைத்தது. குழுவின் தலைவர் ஆட்லி!

ஆட்லியை எதிர்த்தார் பெவான்! அதிலுள்ள ஒழுங்கு முறையை விசாரிக்க ஆட்லியின் தலைமையிலேயே விசாரணைக் குழு!

ஆகா, பெவான் நம் எதிரி, எவருமே எதிர்க்கத் துணியாத என் தலைமையையல்லவா எதிர்த்து விட்டான். விட்டேனா பார், அவனை ஒழித்துக் கட்டும் அரிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று மனம் பூரித்துப் பழிவாங்கும் படலத்தைத் துவக்கினாரா? அதுதான் இல்லை!

பெவானுக்கு அவருடைய கொள்கையை விளக்க வாய்ப்பளித்தார். பெவானை, அவரே சென்று நேரில் கண்டு மனம் விட்டுப் பேசினார். பிரிட்டிஷ் தொழிற்கட்சியில் ஏற்பட விருந்த விளைவு நீங்கி, புதுபலம் பெற்றது. இரண்டாண்டுகளுக்கும் பிறகு அந்த ஒற்றுமை முயற்சியின் மகத்தான விளைவை பெவான்—கெயிட்ஸ்கல் இணைப்பில் பிரிட்டன் கண்டு மகிழ்கிறது.

இதுதான் கட்சியை வளர்த்து, நாட்டுக்கு வழி காட்டும் நல்லறிவாளர் செயல்! பெவான் ஒரு மகத்தான சக்தி. அவருடைய அரிய சேவையை, அறிவுத்திறனை தொழிற்கட்சி இழந்துவிடக்கூடாது என்று ஆட்லியின் மனதில் ஏற்பட்ட நல்லெண்ணம்—தன்னல மற்ற தலைமைக்குள்ள அந்த உயரிய பண்பு—தொழிற்கட்சியை வாழவைத்தது.

ஆனால் இங்கோ......தலைமை நீடிக்க லட்சியங்கள் கைவிடப்படுகின்றன! என்னுடைய எதிரிக்கு எதிரி எனக்கு நண்பன் என்ற தன்மையில் லட்சியத்தைக் கேலி செய்வோரிடம் குலவுவதும், லட்சியத்தைக் கடைப் பிடிப்போர் நமக்குப் பிடிக்காதவர்கள் என்பதற்காகவே அவதூறு பேசுவதுமான வேதனைக் காட்சிகளை, பிறர் வாழச் சகியாப் 'பெருந்தகையாளர்'களைக் கொண்ட தமிழகத்தைத் தவிர வேறெங்கே காண முடியும்?

* * *

கனம் காமராஜரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு பார்லிமெண்டரி போர்டு—காங்கிரஸ் கட்சி—'காங்கிரஸ் டிக்கட்' கேட்போரின் மனுக்களைப் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. கக்கன், கமிட்டியின் கூட்டத்தில் கலந்து கொள்ள வில்லையாம்!

மனுக்கள் பரிசீலனையில், காமராஜ் கோஷ்டியினருக்கு மட்டுமே காங்கிரஸ் டிக்கட் கிடைக்க அதிக வாய்ப்பிருப்பதாக 'என்னுடைய காங்கிரஸ் நண்பர் கூறுகிறார். தமிழ் நாட்டுக் காங்கிரசில் காமராஜரின் செல்வாக்கிற்கு இதுதான் காரணமாம். பார்லிமெண்டரி போர்டில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி வேண்டியவர்களைக் காங்கிரஸ் டிக்கட்டில் நிறுத்தி வெற்றி பெறச் செய்து விடுவாராம். பிறகு அவர்களும் பூனைக்குட்டி விஸ்வாசத்தோடு, காமராஜர் சொல்லுவதற் கெல்லாம் தலையாட்டியும் கைதூக்கியும் தங்கள் அரசியல் அறிவைப் புலப்படுத்துவார்களாம்.

இதெல்லாம் நானாகச்சொல்லவில்லை. காங்கிரஸ் கோஷ்டிச் சண்டைகளில் அடிபட்டு அனுபவம் பெற்ற என் காங்கிரஸ் நண்பர் வெளியிடும் தகவல்கள்!

* * *

சமீபத்தில் அறிஞர் அண்ணாவின் படத்தை நகராட்சிமன்றமொன்றில் திறந்து வைத்துப் பேசுகையில் பி. டி. ராஜன் அவர்கள், சென்னை சட்டசபையில் தி. மு. க. மட்டுமே நல்ல எதிர்க்கட்சியாக இயங்க முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பி. டி. ராஜன் மட்டுமல்ல; தமிழ் நாட்டு அரசியலின் முது பெரும் அறிஞர்களின் முடிந்த முடிவும் அதுவே யாகும்.

இரண்டொரு மாதங்களுக்கு முன் ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர் ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் ஒரு நல்ல தமிழறிஞர். தமிழ் நாட்டு அரசியல் நிலைபற்றி அவருடைய கருத்தை அறியப் பல கேள்விகள் கேட்டேன். அவரும் பொறுமையாகப் பதில் சொன்னார்:

"தி. மு. க. தேர்தலில் போட்டியிட முடிவு செய்திருப்பது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?"—நான் கேட்டேன் அவரை.

சிறிது நேரம் மௌனமாகச் சிந்தனை செய்தபின் சொன்னார்:

"தி. மு. க. தன்னை ஒரு அசல் அரசியல் கட்சியாகச் செய்து கொண்டிருப்பதில் எனக்கு மகிழ்ச்சி. அரசியல் கட்சிஎன்ற பெயருக்கு ஏற்ற தகுதிகளுள் தேர்தலுக்கு நிற்பது இன்றியமையாதது. சமுதாய சீர்திருத்தக் கட்சி நாங்கள், அரசியல் சூதாட்டம் எங்களுக்குத் தேவையில்லை என்று கூறிவிட்டு யார் யாரையோ தேர்தலில் ஆதரிப்பதைவிட, முன்னேற்றக் கழகம் செய்துள்ள முடிவு பாராட்டத் தக்கது"

இதைச் சொன்னவர், தமிழ் நாட்டு அரசியலில் ஒரு காலத்தில் ஒரு சக்தியாக விளங்கி, இப்பொழுது அரசியலிலிருந்து விலகி தமிழ்ப்பணி ஆற்றி வருபவர்.

நம் லட்சியம் உறுதியானது; கொள்கை, தெளிவுடையது; போகின்ற பாதை நேர்மையானது.

வெற்றியைப் பற்றி சந்தேகமேன் தோழர்களே! நல்லறிவாளர் அனைவரும் நமக்கு ஆசி கூறுகிறார்கள். நம்பிக்கையோடு உழைப்போம். வெற்றி மகள் நமக்கு மாலையிடும் நாள் வெகு தூரத்தில் இல்லை!

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நாளது 26—10—56 வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு, எனக்கும், தோழியர் பரமேஸ்வரிக்கும். தஞ்சை மாவட்டம், திருவீழி மிழலை கீழவீதியில் உள்ள மணமகள் இல்லத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும் வாழ்க்கை ஒப்பந்த விழாவிற்கு, தாங்கள் இதனையே அழைப்பிதழாகக்கொண்டு வந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

சேலம்,
10—10—56

அன்பன்,
வி. சிவப்பிரகாசம்

மகிழ்கிறோம்

உடையார் பாளையம் மறைந்த ஆசிரியர் வேலாயுதம் அவர்களின் புதல்வி தோழியர் மங்கையர்கரசி அவர்கள் சென்ற 29—9—56 அன்று வெள்ளி மாலை 3 மணி அளவில், ஓர் ஆண்மகவுக்குத் தாயானார்கள் என்ற செய்தி அறிந்து மிகவும் மகிழ்கிறோம்.

சென்னை 12-10-56 வெள்ளி

விலையும் நிலையும்!

★

நாட்டிலே பஞ்சம் ஏற்பட்டாலும், கொள்ளை நோய் படையெடுத்து வந்து குடி மக்களைத் துன்புறுத்தினாலும் நாட்டவர் ஆண்டவனைச் சபிப்பதற்கு முன்பு ஆண்டு கொண்டிருப்பவர்களைக் குறைபட்டுக் கொள்வதுதான் அன்று முதல் இன்றுவரை நிலவிடும் பழக்கமாக இருந்து வருவதைக் காண்கிறோம்.

அந்த முறையில் பார்த்தால் இன்று ஆட்சி பீடத்திலே அமர்ந்து நீதி நெறி முறை பிறழாமல் செங்கோல் செலுத்திக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் தேசீயத் தோழர்கள்தான் இந்த தேசத்தவரின் ஒருமித்த பழிச் சொல்லுக்கு உடமையாளராக மாறியிருப்பதையும் காண்கிறோம்.

எங்கு நோக்கினும் விலை வாசிகள் ஆசிய ஜோதியாம் நேருவோடு போட்டி போட்டுக் கொண்டு உயர்ந்து கொண்டே வந்து, மச்சு வீடுகளிலே ஆள் அம்புக்குக் குறைச்சலின்றி வாழும் நிதி படைத்த கூட்டமும் உணர்கின்ற அளவுக்கு நிலைமை மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கிறது.

செந்நெற் கொல்லையாம்; தென்னகத்தின் களஞ்சியமாம் தஞ்சையில் கூட அரிசி விலை அபரிமிதமாக உயர்ந்திருக்கிறது.

1951-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தஞ்சையில் அரிசி விற்ற விலை ரூ. **13—8—3.**

இப்போதோ அங்கு அரிசி விலை ரூ. **20—1—0** ஆக உயர்ந்திருக்கிறது.

கோவை மாவட்டத்திலோ ஒரு ரூபாய் கொடுத்தால்—ஏழரை ஆழாக்குதான் அரிசி பெற முடிகிற அளவுக்கு சூழ்நிலைகள் உருவாகியிருக்கின்றன.

இவையனைத்தும் எதிர்க் கட்சிக்காரர்கள் வேண்டுமென்றே கூட்டிச் செல்லும் புள்ளி விபரமல்ல.

நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரே வெளியிட்டிருக்கிறார், தமிழகத்தில் நிலவுகின்ற இந்த அவல நிலைமையை!

கோடிக் கணக்கிலே செலவு செய்து ஐந்தாண்டுத் திட்டமென்னும் பெயரிலே விவசாயத்துக்கு வாரியிறைப்பதாகக் கணக்குக் காட்டுகிறார்கள்.

மேலும் முதல் ஐந்தாண்டுத் திட்டம் காரணமாக உற்பத்தி ஓரளவு உயர்ந்திருப்பதாகவும் மார்தட்டிக் கூறிக் கொள்கின்றனர்.

சினிமாவிலே, 'சிலேடு'கள் மூலம் பாமர மக்களுக்கு காங்கிரஸ் ஆட்சியின் இந்த சேவைகள் யாவும் உணர்த்தப்படுகின்றன.

பிரச்சார வாகனங்கள்; அரசுப் பிரசாரகர்கள் — இவர்கள் அனைவரும் உற்பத்திப் பெருக்கத்தை உவகையுடன் ஊர் ஊராகச் சொல்லித் திரிகின்றனர்.

மேடையிலே; மந்திரிகளின் பிரசங்கங்களிலே; திரைப்படத்திலே; செய்தித் தாளிலே; வானொலியிலே; எங்கும் உற்பத்தி உயர்ந்துவிட்டது—என்பதைக் கட்டாயமாகத் தெரிந்து கொள்கிற பாமரன், கடைத் தெருவுக்குச் சென்று அங்கே உணவு தானியத்தின் விலை ஒரேயடியாக உயர்ந்திருப்பதைப் பார்க்கும்போதுதான் குழப்பம் அடைய ஆரம்பிக்கிறது.

உணவு உற்பத்தி பெருகிவிட்டபோது அரிசி விலையும் பெருகுவானேன்—என்ற சந்தேகம் அவன் இதயத்திலே வேரூன்றுகிறது.

அப்போதுதான் அவனுக்கு யாரோ ஒருவர் கூறிய பொன்மொழி நினைவுக்கு வருகிறது:

"இந்த உலகத்தில் மூன்றுவித பொய்கள் இருக்கின்றன. ஒன்று சாதாரண பொய்; இரண்டாவது அபாண்டமான பொய்; மூன்றாவது மிகப் பெரிய பொய்தான், புள்ளி விபரம்.'

— உற்பத்தி பெருகி விட்டதாகக் கணக்குக் காட்டிய ஐந்தாண்டுத் திட்டத்துப் பிரச்சாரகன் சொன்ன வார்த்தைகளை மேலே சொன்ன வாசகத்தோடு அவனையறியாமலேயே ஒப்பிட்டுப் பார்க்கத் துவங்குகிறான், பாமரன்!

அவனைப் பொறுத்தவரையிலே ஐந்தாண்டுத் திட்டம் அவன் காலத்துக்குப் பயன்படாத கனவாக; காகிதக் கோட்டையாக; கானல் நீராக மாறி விடுகிறது.

— இப்போது நாட்டிலே உருவாகி யிருக்கும் விலை வாசி விபரங்கள் பொது மக்களது இதயத்திலே இது போன்ற படப்பிடிப்பைத்தான் சிருஷ்டித்திருக்கிறது என்பதை யாருமே மறுக்க முடியாது.

அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான பண்டங்கள் இப்படி கோபுரத்தில் ஏறிக்கொண்டு, ஏழை மத்தியதர வர்க்கத்தினரின் கைகளுக்கு அகப்படாமல் போனதற்கு என்ன காரணம்?

மத்திய அரசின் அமைச்சர்கள் இதற்கு ஒரு வித காரணங்களைக் காட்டுகிறார்கள்.

மாநில அரசின் அமைச்சர்கள் கூறும் காரணமோ அதற்குச் சிறிது பேதங் கொண்டதாக அமைந்திருக்கிறது.

ஆனால் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் இரு சாராரும் ஒத்துக் கொள்ளும் ஒரு காரணம் இருக்கிறது.

அதுதான், பண முதலைகள் சில தங்களது லாப வேட்டைக்காக சரக்கை முடக்கி வைத்திருக்கிறார்கள்—என்பது!

டெல்லி மந்திரிகளும், மாநில மந்திரிகளும் சேர்ந்தே முறையிடுகிறார்கள், நாட்டு நன்மையிலே அக்கரையில்லாத 'திமிங்கலங்கள்' சில தானியங்களைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று!

ஆனால் இந்தப் 'பதுக்கல் பிராணிகள்' சார்பாக இதுவரை என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது, ஆட்சி பீடம்?

எதுவுமில்லை.

முன்பு கள்ளமார்க்கெட் வியாபாரிகளை யெல்லாம் ஈவு இரக்கமின்றி தூக்கிலேற்றுவோம்; நடு வீதியிலே நிறுத்திவைத்து சவுக்கடிகளைத் தண்டனையாகத் தருவோம்—என்று சிம்மக் குரலில் சொல்லிக் காட்டியவர்கள், இன்று அந்தக் கள்ளமார்க்கெட்காரர்களைவிட எல்லா விதத்திலும் அதிகமாகவே நாட்டவருக்குத் தீங்கிழைத்துவரும் 'பதுக்கல் காரர்களை' அனுமதித்துக் கொண்டுதானிருக்கிறார்கள், மானம், வெட்கம், சூடு, சொரணை கடுகளவும் இன்றி!

இனி அடுத்த காரணத்துக்கு வருவோம்.

சென்னை வந்த டி. டி. கே. அறிவித்தார், உணவு தானியங்களின் போக்கு வரத்திலே கட்டுப்பாடு ஏற்படுத்தினால் இனி வருங் காலத்தில் நிலைமை சரிப்பட்டுவிடுமென்று!

ஆனால் இதை மறுத்த நிதி அமைச்சர் சுப்பிரமணியனார் என்ன பேசியிருக்கிறார் தெரியுமா?

"ஆண்டு தோறும் சென்னை ராஜ்யத்துக்கு ஏற்படும் பற்றுக்குறை இரண்டரை லட்சம் டன் தானியம். மத்திய அரசாங்கம் இதைச் சரிப்படுத்த முன் வந்தால் எல்லாப் பிரச்சினைகளுமே செத்துவடும்; போக்கு வரத்துக் கட்டுப்பாடுகளுக்குக்கூட அவசயம் ஏற்படாது."

—சுப்பிரமணியனார் வாசகங்கள் இவை!

ஆண்டுதோறும் சென்னைக்கு ஏற்படும் பற்றுக்குறை இரண்டரை லட்சம் டன்கள்;

அதை மத்திய அரசாங்கம் நிவர்த்தி செய்து விட்டால் நிலைமை சரியாகி விடுமாம்!

ஆமாம்; மத்திய சர்க்காரின் ஒழுங்கற்ற முறையும் இந்த விலைவாசி உயர்விற்கு ஒரு காரணமாக அமைந்திருக்கிறது!

மத்திய அரசு நம்மை மாற்றாந்தாய்போல் நடத்துகிறது என்று நாம் சொல்வது கேட்டு சீறிப்பாயும் சிறுமதியாளர்களே! இன்று விஷம் போல் ஏறி வரும் விலையைப் பாருங்கள்; அந்த விஷம் தீண்டப்பட்டு அவதியுறும் நாட்டவரைப் பாருங்கள்! இதற்கெல்லாம் காரணமாயிருக்கிற ஒரு மத்திய அரசாங்கம் நமக்குத் தேவைதானா?

—சிந்தியுங்கள்; தோழர்களே! சிந்தியுங்கள்!

★ சேரர் வாழ்ந்த சிறப்பிடம்! ★

மலையாள மாந்தரின் மூதாதையர் சேரர் குலத்தவர்! – இந்த உண்மையை இப்போது மலையாள மக்களே உணர ஆரம்பித்திருக்கின்றனர்.

சிறக்கல் டி. பாலகிருஷ்ண நாயர் என்பவர் 'மாத்ருபூமி' என்னும் மலையாள ஏட்டில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்தான் இங்கே தரப்பட்டிருக்கிறது.

ஆங்கில ஆட்சி வேரூன்றுவதற்கு முன்பு கேரளம் மூன்று துண்டாகப் பிரிந்திருந்தது. அந்தக் காலத்தில் ஏற்பட்ட இந்தப் பிரிவினைதான் அந்நியர் ஆட்சி நிலைக்கக் காரணம். இந்தப் பிரிவினையில் கேரளம் முழுவதும் சேரவில்லை. ஆயினும், ஐக்கிய கேரளம் ஏற்படப் போகும் இந்தச் சந்தர்ப்பத்தில் அதன் பழைய சரித்திரத்தை நினைவு கூர்வது பொருத்தம்.

கேரளத்தின் பழைய சரித்திரத்தை விளக்கும் நூல்கள் மலையாள மொழியிலே இல்லை. ஆனால் பழந்தமிழ் நூல்களில் கேரள சரித்திரம் பரவிக்கிடக்கிறது. சங்க காலத்து நூல்கள் இதில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டிருக்கின்றன.

சேர, சோழ, பாண்டியர் என்ற மூவரும் பழந்தமிழ் இலக்கியங்கள் கொண்டாடும் மூவேந்தராவர். இதில் சேர மன்னர் சேர்ந்திருப்பது அவர் தமிழுக்கும், தமிழ்க் கவிஞர்களுக்கும் செய்துவந்த பணியையும் கொடையையும் விளக்குகிறது. மேலும், தமிழிலிருந்துதான் மலையாள மொழி உருப்பெற்றது என்பது நம்பத் தகுந்த ஒரு வாதம். ஆகவே, தமிழ்த் தொண்டாற்றிய சேர மன்னரின் காலத்தில் மலையாள மொழி உருவாகவில்லை என்றோ, அல்லது தமிழிலிருந்து முற்றும் தனித்த வேற்றுருவம் பெறவில்லை என்றோ ஊகம் செய்ய இடம் உண்டு. எப்படியானாலும் பழந்தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அந்த மன்னர்கள் ஆக்கம் அளித்திருப்பது தெள்ளத் தெளிந்த விஷயம். இந்த மூவேந்தரும் இலக்கிய நாயகர்கள். அப்படிப்பட்ட மகான்களில் ஒருவராவர் பெருஞ்சேரல் இரும்பொறை.

புராதன சேர மன்னர் பரம்பரையில் செல்வக் கடுங்கோ வாழியாதான் எட்டாவது சக்கரவர்த்தியாக இருந்தார். அவருடைய மகன்தான் பெருஞ்சேரல் இரும்பொறை என்பவர். இவர் ஒன்பதாவது சேர சக்கரவர்த்தியாகப் பதினேழு ஆண்டுகள் அரசு புரிந்தார்.

இந்த மன்னர் அரச கடமைகளைப் பின்பற்றி முதலில் தம் பகைவரை வென்று கீழ்ப்படியச் செய்தார். சேர மன்னருக்கு அடிபணிந்து வரி கொடுத்திருந்த நாடுகளில் ஒன்றாகும் 'காமூர்' என்பது. அதன் புதிய அரசரான 'கழுவுள்' என்பவர் சேர மன்னருக்கு வரி கொடுக்க மறுக்கவே, பெருஞ்சேரல் இரும்பொறை போர் தொடுத்தார்.

காமூர் அரசர் மிகுந்த பலசாலி. அந்த நாட்டில் ஏராளமான ஆடு மாடுகள் இருந்தன. அவற்றை வைத்து ஆதரித்து வரும் இடையர்கள்தான் அங்கே குடிகள். அந்த அரசர் மிகுந்த வீரம் உள்ளவர். காமூரின் கோட்டையும் அகழும் பகைவர் அணுகாவண்ணம் அந்த நாட்டைக் காத்துவந்தன. அகழில் ஏராளமான முதலைகள் இருப்பதாக காவியம் கூறுகிறது. அங்கே மிகவும் சிரமத்துடன் சேர மன்னர் உட்புகுந்தார். அகழில் இருக்கும் முதலைகளுக்குப் பல சேர வீரர்கள் இரையானார்கள். முடிவில் சேர மன்னர் கழுவுளுடன் மல் யுத்தம் செய்து அவரைக் கொன்று வெற்றி வாகை சூடினார். அங்கே இருந்த ஆடுமாடுகளைப் பலருக்குத் தானமாக வழங்கினார். அந்த இடத்து மக்கள் குறும்பர் நாட்டில் புகுந்து கொண்டார்கள். குறும்ப மன்னன் சேர மன்னருக்குச் சிற்றரசன் அல்லன். ஆயினும் அவரிடம் பயந்தவன். ஆகவே சேர மன்னருக்கு வரி கட்டுவதாக ஒப்புக்கொண்டு காமூர் மக்களுக்குச் சரணமளித்தான்.

அதியமானோடு பெருஞ்சேரல் இரும்பொறை செய்த போர்தான் மிகப் பிரசித்தம். அதியமான் தன் அயல் நாடான திருக்கோவலூரைக் கைப்பற்றி அதன் அரசராகிய 'திருமுடிக்காரி' என்பவரை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டான். உடனே அவர் தம் நண்பரான சேர மன்னரைச் சரண் புகுந்து, 'என் மானத்தையும் மண்ணையும் மீட்டுக் கொடுக்க வேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். அதியமானோடு சேர மன்னர் போர் தொடுக்குமுன் அவனுடைய சிறந்த நண்பனும் தம் பகைவனுமான 'ஓரி'க்கு எதிராகப் படையெடுக்கத் தீர்மானித்தார். 'ஓரியின் கொல்லிமலை நாட்டைக் கைப்பற்றினால், ஓரி போரிடும்போது அதியமானும் அவனுக்கு உதவ முன் வருவான். இருவரையும் ஒரே போரில் வென்றுவிடலாம்' என்று சேர மன்னர் எண்ணினார்.

பாண்டிய–சோழ மன்னர்கள் ஓரிக்கு உதவ முன் வருவார்கள் என்றும், ஆதலால் தம் எண்ணம் ஈடேறுவது அவ்வளவு எளிதல்ல என்றும் அவருக்குத் தெரியும். ஆயினும் சுத்த வீரரான பெருஞ்சேரல் இரும்பொறை, கொல்லிமலை நாட்டை தம்முடைய படைகளுடன் போய்த் தாக்கினார். சோழ—பாண்டியருடனும் அதியமானுடனும் ஓரி சேர்ந்து வந்து சேர மன்னரை எதிர்த்தான். கடும் போர் நிகழ்ந்தது. 'அது போர்க்களமல்ல; பிணக்காடாக இருந்தது' என்று கவிஞர்கள் வர்ணித்திருக்கிறார்கள். முடிவில் வள்ளல் வல்வில் ஓரி மரணம் அடைந்தார். சோழ—பாண்டிய மன்னர்கள் தம் நாடுகளுக்கு ஓடிவிட்டார்கள். அதியமான் தன் நெடுங்கோட்டைக்குள் புகுந்து மறைந்து கொண்டான். சேர மன்னர் அவனை விடாமல் பின் தொடர்ந்துபோய் அந்தக் கோட்டையை வளைத்துக் கொண்டார். பல மாதங்கள் அதியமான் வெளிவரவேயில்லை.

போரில் பயம் கொண்ட அதியமானைத் தமிழ்க் கவியரசியாகிய ஔவையார், 'மலைக் குகையில் வாழும் புலி சீறுமாயின், அதனை எதிர்த்து நிற்க வல்ல மான் கூட்டமும் உண்டோ? இல்லையன்றோ; அதுபோலப் பெரு வீரனான நீ போர்க்களம் சென்றால் உன்னை எதிர்த்து நிற்கும் வீரரும் உண்டோ!' என்று கூறிப் போர் செய்யத் தூண்டுகிறாள். தன்மானமுடைய அதியமான் பெருஞ் சேனையுடன் வெளிப்பட்டுப் போர் செய்து முடிவில் சேர மன்னரிடம் அடிபட்டு மாண்டான். வெற்றி மாலை சூடிச் சேர மன்னர் 'தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை' என்ற பட்டம் பெற்றார்.

பெருஞ்சேரல் இரும்பொறையை இன்று மக்கள் கொண்டாட வேண்டியது, அவருடைய வெற்றிக்கும் வீரத்துக்கும் புகழுக்குமல்ல. தமிழ் இலக்கியத்துக்கு அவர் அளித்திருக்கும் வெகுமதிக்காகவே நாம் இன்று அவரைப் போற்ற வேண்டும். தமிழின் பழம் கவிகளில் ஒருவர் மோசிகீரனார். இவர் ஒருநாள் சேர மன்னரைக் காண்பதற்காகச் சேர ராஜதானியான வஞ்சி மாநகரத்துக்குச் சென்றிருந்தார்.

முன் காலத்து அரசர்கள் வீர முரசு, தியாக முரசு, நியாய முரசு—இந்த மூன்று முரசுகளையும் நன்றாக அலங்காரம்செய்து கட்டிலில்வைத்து வழிபாடு செய்வது வழக்கம். இப்படி ஒரு சந்தர்ப்பத்தில்தான் மோசிகீரனார் வஞ்சி மாநகரத்துக்குச் சென்றார். அவர் பசியாலும் வழி நடந்த களைப்பாலும் தளர்ந்து போயிருந்தார். அதனால் வீர முரசு வைப்பதற்காக அலங்காரம் செய்திருந்த கட்டிலில் படுத்து உறங்கிவிட்டார்.

முரசு வழிபாடு செய்வதற்காக மந்திரிகளுடன் பெருஞ்சேரல் இரும்பொறை வந்தார். அழுக்குப் படிந்த எவரோ ஒருவர் முரசுக் கட்டிலில் படுத்துக் கிடப்பதைப் பார்த்தார். அந்தக் கொடும் குற்றத்துக்குத் தண்டனை, வாளால் அவர் சிரத்தை வெட்டுவதுதான். உடைவாளை உறுவினார். படுத்திருப்பவரின் அருகில் சென்று உற்றுப் பார்த்தார். மீண்டும் வாளை உறையில் இட்டார். உடனே வெண்சாமரத்தை எடுத்து, அதை முரசுக் கட்டிலில் படுத்திருக்கும் அந்த மனிதருக்குச் சக்ரவர்த்தி வீசலானார்.

குளிர்காற்றுப் பட்டு கீரனார் விழித்துக் கொண்டார். அப்போது சேர மன்னர் தமக்கு சாமரம் வீசிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அரசரைப் பார்த்து, 'அறியாமல் முரசுக் கட்டிலில் படுத்துவிட்ட என் தலையை வெட்டித் தண்டிக்காமல் விட்டது பெரிதல்ல. வெண்சாமரம் எடுத்து உம் மார்பில் அணிந்த மாலைகள் அசைய வீசுவது விண்ணோரும் செய்யாத அருஞ் செயல் அல்லவோ!' என்று கொண்டாடிப் பாடினார். அன்று முதல் பெருஞ் சேரல் இரும்பொறை 'வெண் சாமரம் வீசிய வேந்தர்' என பெயர் பெற்றார்.

அரிசில் கிழார் என்ற மகாகவி இந்தச் சேர மன்னரைக் குறித்துச் சில கவிகள் பாடியிருக்கிறார். 'பதிற்றுப் பத்து' என்ற செந்தமிழ் நூலில் எட்டாம் பத்தில் இந்தக் கவிகள், அடங்கியிருக்கின்றன. இவை மிகவும் அழகானவை. அரசர் அந்தக் கவிஞரை எப்படி கௌரவிப்பது என்று புரியாமல் யோசனையில் ஆழ்ந்தார். முடிவில் நகருக்கு வெளியே இருக்கும் கவிஞரிடம் பட்டத்தரசியோடு சென்று சேர ராஜ்யம் முழுவதையும் ஏற்க வேண்டும் என்று பிரார்த்தித்தார். அரசரையும் சேர நாட்டையும் கவிஞர் வாழ்த்தினாரே தவிர, ராஜ்யத்தை ஏற்கவில்லை. முடிவில் பெருஞ்சேரல் இரும்பொறை அந்தக் கவிஞரை தம்முடைய மந்திரிகளில் ஒருவராக இருக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டு தம் சபையில் அவரை இருக்கச் செய்துகொண்டார்.

கலையும் காதலும்

பி.சி.கணேசன்
பி.எஸ்ஸி.பி.டி

'கலைமணம்' பத்திரிகையின் ஆசிரியரான நடனபாதம், அந்த அழைப்பிதழைத் திரும்பத் திரும்ப வாசித்தார்! எழுத்தெழுத்தாகச் சுவைத்தார். எத்தனையோ விருதுகள் பெற்ற அவர், இந்த இன்ப நாளுக்காக எவ்வளவு ஏங்கித் தவித்திருக்கிறார் என்பது அவருக்கல்லவா தெரியும்? எத்தனையோ கடினமான லட்சியங்கள் அவர் நினைத்தவுடன் ஈடேறியிருக்கின்றன. ஆனால் இந்த அவருடைய லட்சியம்...?

ஆகா! நாளை ஞாயிற்றுக்கிழமை! மாதவியே, நளினியின் உருவெடுத்தல்லவா ஆடப்போகிறாள்.....பரத கலையே புத்துயிர் பெறப் போகிறது. நளினியின் நளினத்திலே 'சதஸ்' அப்படியே லயித்துக் கிடக்கும். அவள் விழிகள் ஓடும்; விரல்கள் பாவம் பேசும்; இடை நெளியும்; எங்கும், எவர் உள்ளத்திலும் இன்பம் நிரம்பும்! கலையே பெண்ணுருக் கொண்டு களி நடனம் புரியப் போகிறது. கலைவிழா கண் கொள்ளாக் காட்சி! விழாவின் தலைவர், திருவாளர் நடனபாதம். அப்பப்பா! நினைக்கவே, உடலும் உயிரும் ஒரு சேரச் சிலிர்க்கின்றனவே!

அவருடைய பெயரும் அவளுடைய பெயரும் ஒரே அட்டையில்—அழைப்பிதழில்! அவள் கலைச்செல்வி; அவரோ கலா ரசிகர்; கலை விமர்சகர். தமிழகத்தின் நாட்டியக் கலை வளர்ச்சியே, அவருடைய பேனா முனையை நம்பிக் கிடக்கிறது.

கலையரங்கில் ஏற்படும் அவர்களது சந்திப்பு......ஆமாம். கோவலன் கூட மாதவியை... கோவலனை ஈர்த்தது மாதவியின் அழகு ... ஆனால் நாட்டியக்காரி நளினியின்மீது நடனபாதம் கொண்டுள்ளது அசல் கலைப் பிரேமை யல்லவா?

அவர் விமர்சனத்துக்கு அவள் ஒரு இலக்கியம்; நடனபாதம் பாராட்டி விட்டால் கலையுலகில் யாரும் புகழை அள்ளிக்கொண்டு போய்விடலாம்.

ஆடி முடித்தவுடன் அவருடைய பாராட்டுரைக்காக அவள் ஆவலோடு பார்த்திருப்பாள். அவர் மேடைமீது ஏறி, புகழுரை பொழிவார்! மன்றம் மகிழ்ந்து கரகோஷம் செய்யும். அவள் கருவிழிகள் அவரை நன்றியுணர்ச்சியோடு பார்க்கும். பெருமிதம் தோன்ற அவர் அவளைப் பார்ப்பார்! கண்கள் சந்திக்கும்; காதல் மூகிழ்க்கும்!

நடன பாதத்தின் கரங்கள் 'வெட வெட' வென்று நடுங்கின. ஒருவகையான இன்பவுணர்ச்சி அவர் உடலெங்கும் பரவியது. நாற்காலியில் அப்படியே சாய்ந்து விட்டார்...

❋

அவருடைய கற்பனை மறுநாள் நிஜமாயிற்று. 'கலா மண்டபம்' கொள்ளாமல் கூட்டம் நிரம்பி வழிந்தது. நாட்டியராணி நளினி ஆடினாள். முகில் கண்டு சிறகு விரித்தாடும் மயில் போல—மகுடி கேட்டு மயங்கியாடும் நாகம் போல—பேடுகண்டு காமம் வெளிப்படுத்திக் கூத்தாடும் புறாப்போல—எண்ணிலா உவமைகள் காண்போரின் கருத்திலே தோன்ற ஆடினாள். தலைமை வகிக்கும் நடனபாதத்தின் உள்ளத்தில் கலை வெள்ளம் பாய்ந்து கருத்தலைகள் மோதின.

அடுத்த வாரம் 'கலைமணம்' இதழில், அட்டையில் நளினியின் அழகான 'போஸ்' ஒன்று வெளியிட வேண்டும். உள்ளே அவளுடைய கலாமேதைமை பற்றி ஒரு குறிப்பு—சேச்சே, அது போதாது—அவள் நாட்டியத் திறனை வியந்து ஒரு எழுத்தோவியமே தீட்டிட வேண்டும்! பிறகு, பத்திரிகைப் பிரதி ஒன்று அவளுக்குத் தவறாது அனுப்பிவிட—கூடாது, கூடாது—நேரிலேயே கொண்டுபோய்க் கொடுத்து விடவேண்டும்....பிறகு.... பிறகு...

அவள் நாட்டியம் நின்றது; அவர் சிந்தனை வண்டியும் திடீரென்று 'பிரேக்' போட்டுக் கொண்டது. பேச எழுந்தார். நாஅசைய மறுத்தது! கோர்வையாக அவர் எண்ணி வைத்திருந்த எண்ணங்கள், குழம்பி அவியலாக வெளிவந்தன. ஆனாலும் அவரது பேச்சு அன்று ஒரு மகத்தான வெற்றி! நளினியை, சொல்லுக்கு மதிப்பேயில்லாமல் நாவால் அர்ச்சித்தார். அவருடைய புகழுரை கேட்டுப் புளகாங்கிதம் அடைந்த சபை, கரகோஷம் செய்து, ஒவ்வொரு சொல்லையும் ஆமோதித்தது.

நளினி பூரித்துப் போனாள்!

நளினியின் நாட்டியம் அன்று உயர்வாக இருந்ததா, அல்லது, அதற்கு 'கலை மணம்' ஆசிரியர் வழங்கிய 'விமர்சனம்' உயர்ந்ததா என்பதைத் தீர்மானிக்க முடியாமல் சபை கலைந்தது.

"நான் வரட்டுமா? என்னை நிரம்பவும் பாராட்டி விட்டீர்கள்!"—பவளப் பேழை திறந்து முத்துக்கள் உதிர்ந்தன.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. எண்ணிய எண்ணங்களை அப்படியே எடுத்துச்சொல்லும் ஆற்றல் அற்றுப் போய் விட்டேனே என்று வருந்துகிறேன்."-ஆசிரியர் அங்கலாய்த்தார்!

"உங்களுடைய தலைமையில் ஆடும் சந்தர்ப்பம் கிடைத்தது என் அதிர்ஷ்டம்...நம் அறிமுகம்..."

"நட்பாக வளர்ந்து, கலைப் பணிக்கு ஆவன செய்யும்!"

அவள் விழியால் விடைபெற்றாள். அவரோ வேதனையால் ஏங்கி நின்றார்!

❋

சில மாதங்களிலேயே பத்திரிகைகளில் யூகங்கள் வெளியாயின. நளினி — நடனபாதம் திருமணம் பற்றி எங்குமே பேசிக் கொண்டார்கள். அவர்களுக்குத் திருமணம் நடந்தால் கலையுலகிற்கு வழிகாட்டும் லட்சியத் தம்பதிகளாய் அமைவார்கள் என்று கலாரசிகர்கள் மகிழ்ந்தார்கள். கேள்வி—பதில் பகுதிகளில் இந்தப் பிரச்சினை வெகுவாக அடிபட்டது.

கலையும் விமர்சனமும் இணைந்து வாழ்ந்தால்...கலை முழுமையும், விமர்சனம் லட்சிய நிறைவும் அடைய வேண்டியதுதானே?

கலையுலகின் ஆவல் நிறைவேறி விட்டது. மிஸ் நளினி, மிஸஸ் நளினி நடனபாதம் ஆனார்கள். அதிகார உலகம், அரசியல் தலைவர்கள், ஆட்சியாளர்கள், கலையுலகக் காவலர்கள் காதல் ஜோடியை வாழ்த்தினர். இவர்களுடைய திருமண நிகழ்ச்சி அவ்வாரம் வெளி வந்த பத்திரிகைகளின் தலைப்புச் செய்தியாகி விட்டது என்றால் அதிகம் வளர்த்துவானேன்? சில இதழ்கள் தலையங்கமே தீட்டி விட்டன!

❋

"அத்தான், அத்தான்," என்று அவள் வாய் நிறைய அழைப்பாள்.

"நளினி, நளினி!"—எப்பொழுதும் அவருக்கு அதே ஜபம் தான்.

காரில் அவளை அருகில் வைத்துக் கார் ஓட்டிச் செல்லும் பொழுது, தெருவில் செல்லுகின்ற மக்கள், அதோ கார் ஓட்டிச் செல்லுகிறாரே, அவர்தான் நாட்டியராணி நளினியின் கணவர்—என்று சுட்டிக் காட்டிப் பேசும்போதெல்லாம், அவர் பெருமைப்படுவார். வாழ்க்கை எவ்வளவு இன்பம் நிறைந்தது என்று எண்ணி மகிழ்வார்.

"அத்தான்! இன்று, பம்பாய் 'சேவா சங்கத்தில்' உதவி நடனக் கச்சேரிக்கு வரவேண்டுமென்று அழைப்பு வந்திருக்கிறது. என்ன சொல்லுகிறீர்கள்?"

"இதென்ன கேள்வி நளினி? எட்டு திக்கும் சென்று நீ கலை முரசு கொட்ட வேண்டும் என்பதுதானே என்னுடைய ஆவல்"

"பம்பாய்க்கு நீங்களும் வருவீர்களல்லவா...?"

"நீ போகுமிடமெல்லாம் நான் உன்னோடு சுற்றிக்கொண்டிருந்தால் என்னுடைய பத்திரிகைத் தொழில் என்னாவது?"

"போங்கள், அத்தான்! எப்பொழுது பார்த்தாலும், பத்திரிகை! பத்திரிகை! பத்திரிகை!"

"போ, நளினி! எப்பொழுது பார்த்தாலும் நாட்டியம்! நாட்டியம்! நாட்டியம்!"

இருவரும் சேர்ந்து 'கலகல' வென்று சிரித்தார்கள்!

❋

பம்பாய் 'சேவா சங்கச்' செயலாளர் 'கலைமணம்' பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக அனுப்பிய புகைப் படத்தைப் பார்த்தபோது, ஆசிரியர் நடனபாதத்தின் உடலெல்லாம் பற்றி எரிந்தது. பம்பாயில் நடனக் கச்சேரிக்குத் தலைமை தாங்கிய ஒரு மில் அதிபர், நளினியின் கலையைப் பாராட்டிக் கட்டித் தழுவி, உச்சி மோர்ந்து கொண்டிருக்கும் காட்சிதான் அது!

'இந்த வெட்கங்கெட்ட புகைப் படத்தை என் பத்திரிகையில் பிரசுரித்து விளம்பரம் செய்துகொள்ள வேண்டுமாம்!

'கலையைப் பாராட்ட, கட்டித் தழுவுவது அவசியந்தானா?

❋ தொடர்ச்சி 8-ம் பக்கம்

ஆய்வுக் குழு தங்கும் இடங்கள்

★

காஞ்சீபுரம்	... நகராட்சி தங்கும் விடுதி (இரயில்வே ரோடு அருகில்)
வேலூர்	... டவுன் ஹால்
திருப்பத்தூர்	... 58, சின்னக்கடை வீதி
சேலம்	... பிரபாத் டாக்கிஸ்
நாகர்கோயில்	... நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக அலுவலகம்
கடலூர் என். டி.	... முசாபரி பங்களா

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

சென்ற இதழில்...

[சிந்தாமணி, அய்யனூர் பண்ணைக்குச் சென்று பாலகங்காதரத் தேவரை சந்திக்கப் போகிருள். அங்கே அவள் பார்க்கும் பாலகங்காதரத் தேவருக்கும், பெங்களூரில் தன்னை ஜாமீனில் விடுவித்த பாலகங்காதரத் தேவருக்கும் அதிக வித்தியாச மிருப்பதை அவள் உணர்ந்து வியப்படைகிருள்.

அப்போது தேவரை காவற்காரன் கூப்பிட, அவர் வெளியே போகிருர். சிந்தாமணி ஒளிந்து கவனிக்கிருள். ஆனந்தியைக் கொலை செய்து விட்டு வந்த சேதியை கொலைகாரன் இடும்பன் கூறிடவே, அவனது ரத்தம் படிந்த ஆடைகளையும், அரிவாளையும் குழி தோண்டிப் புதைக்கச் சொல்லுகிருர் தேவர்.

இதையெல்லாம் கவனித்த சிந்தாமணிக்கு தலை சுற்றுகிறது. தேவர், சிந்தாமணியிடம் வருகிருர்.........]

23

அவசரத்தோடும் ஆவலோடும் உள்ளே வந்த தேவர், அங்கே சிந்தாமணியில்லாதது கண்டு ஆச்சரிய மடைந்தார். கனவிலே வந்ததுபோல வந்து மறைந்து விட்டாளே; யார் அவள்?—என்ற ஏக்கம் அவரைப் பிடித்துக் கொண்டது. ஆட்களை அனுப்பி தேடச் சொன்னுர். யார் கண்ணிலும் சிக்காமல் சிந்தாமணி தப்பித்துக் கொண்டாள். வேதபுரத்து வழியைத் தவிர வேறு வழி கிடையாது அவள் அந்தப் பகுதியை விட்டு வெளியேறுவதற்கு! ஊருக்குள்ளே போகாமல் வெளிப் புறங்களிலேயே திரிந்து கொண்டிருந்தால் இரவு வந்ததும் ஊரைக் கடந்து போய் விடலாம் என்ற யோசனையும் பிறந்தது அவளுக்கு!

வேதபுரத்து இடுகாட்டுப் பக்கம் போக வேண்டுமென்று ஒரு ஆசை அவளை உந்தித் தள்ளியது. அங்குதானே அவளுடைய தாயாரின் பிணம் வர வேண்டும். ஊராரின் கண்களில் படாமல் ஒளிந்திருந்தாவது அந்தக் காட்சியைப் பார்க்க வேண்டுமென்று துடித்தாள். மனப் போராட்டத்திற்கு இடமேயில்லாமல் சுடுகாட்டுப் பக்கம் வந்து விட்டாள். சுடுகாட்டைச் சுற்றியுள்ள புதர்கள் அவள் மறைந்து கொள்வதற்கு உதவி புரிந்தன.

அப்போதுதான் கொலை செய்யப்பட்ட ஆனந்தியின் சவத்தை அடக்கம் செய்து விட்டுப் போலீசாரும், வேலைக்கார வேம்பு முதலியவர்களும் போய்க் கொண்டிருந்தார்கள். சிந்தாமணியோ புதரின் மறைவிலிருந்து, தன் தாயாரின்

அடுத்த இதழிலிருந்து
இந்தப் பக்கத்தில்...

"உதய சூரியன்"

நாடகம் தொடரும்...

வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள். அம்மாவை அடக்கம் செய்வதற்கு யாராவது அக்கரை எடுத்துக் கொண்டார்களோ; இல்லையோ — நாதியற்ற பிணமாகப் போய் விட்டார்களோ என்னவோ — என்றெல்லாம் எண்ணி யெண்ணிக் கண்ணீர் உகுத்தாள் சிந்தாமணி. ஒரு நாலைந்து பேர் சிவகாமியின் உடலைச் சுமந்து வந்து கொண்டிருந்ததை சிந்தாமணி பார்த்தாள். அந்த வேதனையிலும் அவளுக்கு சிறிது ஆறுதல் இருந்தது. அம்மாவை அடக்கம் செய்கிற அளவுக்காவது சிலர் கருணை காட்டினுர்களே; என்ற ஆறுதல்தான் அது!

தாயின் உடலிலே தீ பிடித்துக்கொண்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் தாயின் உருவம் சாம்பலாகிவிடும்; அய்யோ—அவளைப் பெற்று வளர்த்து சீராட்டிப் பாராட்டிய மாதா, மண்ணோடு மண்ணாகக் கலந்து கொண்டிருக்கிருள். சுடலைக்கு வந்தவர்கள், தங்கள் கடமை முடிந்துவிட்ட திருப்தியுடன் அந்த இடத்தை விட்டு அகன்ருர்கள். சிந்தாமணி புதரின் மறைவிலேயிருந்து அன்னை எரிந்து கொண்டிருக்கும் இடம் நோக்கி ஓடிவந்தாள். தாய் தணலுக்கு இரையாகும் அந்தக் காட்சியைக் கண்ணீர் வடித்தவாறு பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் நெஞ்சிலே எழுந்த குமுறல்கள்!.......அப்பப்பா—விவரிக்க வொண்ணு வேதனைச் சுழல்கள்!...சுடலையை விட்டுப் புறப்பட்டாள். அய்யோ; அவள் குடும்பம் எவ்வளவு சீக்கிரம் சிதைந்து விட்டது'... பக்தியின் எல்லை வரையிலே போனவர் அவளது அப்பா!... ஆண்டவனின் திருவடிகளையே நம்பி வாழ்ந்த அவளது அம்மா!...அந்த இருவரையும் ஆண்டவன் இவ்வளவு பாடு படுத்தி விட்டாரே; என்ன குறை செய்தார்கள்—அவர்கள் ஆண்டவனுக்கு!

நாள் நட்சத்திரம் பார்க்காமல், வாயிற்படிகூட தாண்ட மாட்டார், சிவநேசர் — அவ்வளவு பெரிய சனுதனி! அவருடைய வீடு, இப்படி அல்லோலகல்லோலப்பட்டு விட்டது!...பெங்களூர் மாப்பிள்ளை சம்பந்தமாக முதன் முதல் கடிதம் எழுதுவதற்குக்கூட ஒரு நாள் முழுவதும் பஞ்சாங்கத்தைப் புரட்டி, நல்ல லக்னம் பார்த்தே கடிதம் எழுதினுர். அப்படிப்பட்ட பக்த சிரோன்மணியை பகவான் பதைக்க விட்டுவிட்டார்! அவர் குடும்பத்தையே பாலைவனமாக்கி விட்டார்!......மிச்ச மிருக்கும் சிந்தாமணி, வேதபுரத்துக்குள்ளே நுழையாமல் வயற்புறங்களிலும், ஆற்ருேரங்களிலும் அன்று பகல் முழுவதும் அலைந்து கொண்டேயிருந்தாள்.

அலையும்போதுதான் அவள் காதில் மற்ருெரு திடுக்கிடும் செய்தி விழுந்தது. ஆனந்தி கொலை சம்பந்தமாக, அழகப்பனும், நயினு முகம்மதும் கைது செய்யப் பட்டிருக்கிருர்கள் என்ற சேதிதான் அது!...அவளால் அந்தச் சேதியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அழகப்பனை எப்படியும் விடுவித்தாக வேண்டும் என்று முடிவு கட்டினுள்.

அவனை அவள் தன் கணவனுகவே கருதிக் கொண்டிருந்ததால் அந்தத் துடிப்பு அவள் நெஞ்சில் எழுந்தது. ஆனந்தி கொலைக்காக அழகப்பன் கைது என்றதும், அவள் நினைவு, பாலகங்காதரத் தேவர் வீட்டு நிகழ்ச்சியின்மீதே சென்றது. உண்மையான பாலகங்காதரத் தேவரை சிக்க வைக்க வேண்டுமென்றும், போலிப் பாலகங்காதரத்தேவர் யார் என்று கண்டு பிடிக்க வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டாள்.

தீர்மானத்தின்படி அவள் வேலையைத் துவங்குவதற்கு, இருளும் வந்து சேர்ந்தது. கால் வலியையும் பொருட்படுத்தாமல் நடந்து நடந்து, டி. எஸ். பி. அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தாள். டி. எஸ். பி. மிக அக்கரையோடு சிந்தாமணி தெரிவித்த விஷயங்களைக் கவனித்தார். சிந்தாமணி தன் கதை முழுவதையும் டி. எஸ். பி.யிடம் வர்ணித்தாள். அவருக்கு சிந்தாமணியின் மீது ஆழ்ந்த அனுதாபம் ஏற்பட்டது.

போலீஸ் படையுடனும், சிந்தாமணியுடனும் டி. எஸ். பி. புறப்பட்டு நேராக அய்யனூர் சென்ருர். அப்போது, பாலகங்காதரத் தேவர் வீட்டிலே பாரத காலட்சேபம் ஒரு பாகவதரால் அதி விமரிசை



அடுத்த தொடர்கதை!

சுருளி மலை

அழகு தமிழில்...அற்புதக் கதை அமைப்போடு

கருணாநிதி தரும்

காதற் காவியம்

விரைவில்!...

அடுத்த இதழில் ஆரம்பமாகிற நாள் குறிக்கப்படும்!

யாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. தேவர் ஆடம்பரமான ஒரு ஆசனத்தில் அமர்ந்து காலட்சேபம் கேட்டுக் கொண்டிருந்தார். ஊர் மக்களும் குழுமி யிருந்தார்கள். போலீஸ் படை நல்ல சமயத்தில் திபு திபு வென உள்ளே புகுந்தது. சிந்தாமணி, போலீசாரிடம்—தேவரும், இடும்பனும் ரத்தக் கறை படிந்த துணிகளையும், அரிவாளையும் புதைத்து வைத்த இடத்தைக் காட்டினுன். அந்த இடத்தைச் சோதித்ததில் ரத்தத துணிகளும், அரிவாளும் அகப்பட்டன. அதே இடத்தில் தேவரும் இடும்பனும் கைது செய்யப் பட்டார்கள்!

போலீப் பாலகங்காதரத் தேவர் யார் என்று கண்டு பிடிக்க வேண்டுமே; அதற்காக சிந்தாமணியின் யோசனைப் படி போலீசார் சிந்தாமணியின் வீட்டில் பதுங்கியிருந்தார்கள். சிந்தாமணியிடம் பெங்களூரில் தெரிவித்திருந்தவாறு, போலீப் பாலகங்காதரத் தேவர் ஒரு வாடகை மோட்டாரில் வந்து இறங்கினுர். போலீசார் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். டி. எஸ். பி. அவரது வேடத்தைக் கலைத்தார். பாலகங்காதரர் மறைந்து விட்டார். அந்த இடத்திலே டைகர்தான் நின்று கொண்டிருந்தான். அவன் வலையில் தன்னை சிக்கவைக்கும் கருத்துடனேதான் தனக்கு உதவி செய்திருக்கிறுன் என்பதைச் சிந்தாமணி புரிந்துகொண்டாள். போலீசாருக்கு ஓரே மகிழ்ச்சி! தங்களை ஏமாற்றி ஓடி விட்டவன் அகப்பட்டுக் கொண்டானே; என்ற பூரிப்பு! அவர்கள், சிந்தாமணிக்கு நன்றி தெரிவித்து விட்டுப் பிறகுவந்து சந்திப்பதாகச் சொல்லி, டைகரை விலங்கு மாட்டி இழுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

மறுநாள் காலையிலே நயினு முகம்மதும், அழகப்பனும் விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. வேலைக்காரன் வேம்புவிடம் விபரம் கேட்டார்கள். அவன், தனக்கு இந்தக் கொலையைப் பற்றி எதுவும் தெரியாதென்றும், வெளியில் எங்கேயோ போய்விட்டு, மருத்துவமனைக்குத் திரும்பும்போது, யாரோ ஒருவன் மருத்துவமனையிலிருந்து ஓடி வந்து, என்னைத் தெரிந்தவனைப்போல், "டே வேம்பு! ஆனந்தியை நயினு முகம்மது கொலை செய்து விட்டான்! இதோ, போலீசை அழைத்து வருகிறேன்— என்று ஓடினுன். போனவன் திரும்பவில்லை. அதற்குள் போலீஸ் வேன் ஒன்று இந்தப் பக்கம் போகவே அவர்களை நிறுத்தி அழைத்துக் கொண்டு மேலே வந்தேன். எனக்கு அப்போது அவ்வளவுதான் தெரியும்!" என்றும் விளக்கினுன்.

"ஆனந்தியைப் பாலகங்காதரத் தேவர் கொலை செய்ய வேண்டிய அவசியமென்ன?" என்று கேட்டான் அழகப்பன்.

அதற்கு வேம்பு, "சில நாட்களாகவே தேவர், ஆனந்தியை அவரது பங்களாவுக்கு வருந்தி வருந்தி அழைத்ததாகவும் — அதை அந்த அம்மாள் மறுத்ததால் இப்படிச் செய்திருப்பார் என நினைக்கிறேன்" என்றும் யூகம் தெரிவித்தான்.

இந்த உண்மைகளையெல்லாம் சிந்தாமணிதான் வெளிப்படுத்தி, தங்களையும் விடுவித்தாள் என்ற செய்தி கேட்டு அழகப்பன், சிந்தாமணிமீது அடங்காத மதிப்பு வைத்தான். சிந்தாமணி களங்கமற்றவள் என்பதற்கு வேம்புவும் ஆதாரங்களை அள்ளி வீசினுன்.

சிந்தாமணியிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று நயினுவிடம் தெரிவித்தான். நயினுவுக்கோ, ஆனந்தியின் முடிவால் ஏற்பட்ட சோகம் தீரவில்லை. அவன் ஊமையாகவே ஆகி விட்டான். கண்ணீர் வடித்தவாறு தலையசைத்தான்.

பிறகு, அழகப்பனும் நயினுவும் சிந்தாமணி வீட்டுக்குப் புறப்பட்டார்கள். வழியில், அன்றைய தினசரிப் பத்திரிகையை வாங்கிப் புரட்டிப் பார்த்தான் அழகப்பன். அதில் பெங்களூர் ரயில் அபின் கடத்தல் வழக்கில் உண்மையான குற்றவாளி சிக்கி விட்டாள் என்றும், சிந்தாமணிமீது குற்றமில்லை யென்று ருஜுவாகி விட்ட தென்றும் செய்தி காணப்பட்டது.

சிந்தாமணி சபதம் எடுத்துக் கொண்டது போலவே, விபச்சாரப் பட்டத்திலிருந்தும்—அபின் கடத்தல் குற்றத்திலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டு—தாஞெரு மாசற்ற மணி விளக்கு என்பதை உலகுக்கு நிரூபித்து விட்டாள். அந்த மணி விளக்கிடம் மன்னிப்புக் கோர அழகப்பன் ஓடி வந்தான் நண்பன் நயினுவுடன்!...

❋

சிந்தாமணி, அன்றைய தினசரிப் பத்திரிகையைப் பார்த்தவாறு ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். அழகப்பன் ஓடி வந்து அவள் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, "சிந்தாமணி! என்னை மன்னித்து விடு!" என்று கதறினுன். அவள் அவன் காலில் விழுந்து, கண்ணீர் பொழிந்தாள்.

"இப்போதாவது என்னை நம்புகிறீர்களா?" என்று கேட்டாள் சிந்தாமணி — அவள் குரல் தழு தழுத்தது!

"நம்புகிறேன் — சிந்தாமணி! என்னை மன்னித்துவிடு!" என்று அழுதான் அழகு!

"அப்படியானுல் .... இப்போதே நமது திருமணம் நடைபெற்ருக வேண்டும்!" —சிந்தாமணி தேம்பியவாறு கூறினுள்.

அழகு, தன் மோதிரத்தைக் கழற்றி அவள் கையில் அணிவித்தான். அவளும் தன் மோதிரத்தை அவனுக்கு அணிவித்தாள். இருவரும் ஒருவரையொருவர் புன்னகை தவழப் பார்த்தனர்.

அழகப்பன் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவள், தடாலெனத் தரையில் சாய்ந்தாள்.

"சிந்தாமணி!" என்று தாவித் தூக்கினுன் அழகப்பன். அவள் மெல்ல விழி திறந்து, இதழசைத்தாள்.

"என்னை மன்னித்து விடுங்கள்; நான் கொடியவிஷம் சாப்பிட்டிருக்கிறேன்" என்ருள். அழகப்பனும் நயினுவும் திடுக்கிட்டனர்....

"ஒரு நாள்...வெள்ளிக்கிழமை...உங்கள் வருகையை ஆவலோடு எதிர்பார்த்தேன்... இன்றுகூட வெள்ளிக்கிழமை தான்...அந்த ஆவல் பூர்த்தியாயிற்று!" என்றபடி அவன் முகத்தில் ஒரு முத்தமிட்டாள்...பிறகு அவள் கண் விழிக்கவே யில்லை!...

சபதத்தை நிறைவேற்றிக் கொண்டு அந்தப் புள்ளி மயில் சவமாகி விட்டது, வெள்ளிக்கிழமையிலே!...

வெள்ளிக்கிழமையிலே பெண் வீடு பார்க்க வந்த நண்பர்கள் இருவரும்......தங்கள் வாழ்க்கை ஏட்டிலே அழியாத இடம் பெற்று விட்ட இரண்டு பெண்மணிகளையும் நினைத்து நினைத்து நெஞ்சு நெகிழ்ந்தவாறு பெங்களூர் திரும்பினுர்கள்....

(முற்றும்)

"வெள்ளி வீதி"

முக்கிய அறிவிப்பு!

வெள்ளிவீதிக்கான தனி அச்சகம் நிறுவும் முயற்சியில் ஈடுபட்டு, அந்த முயற்சி இரண்டொரு வாரங்களில் நிறைவேற இருக்கிறது. அச்சகம் நிறுவிட இடம் இன்னும் ஒரு வாரத்தில் கிடைத்துவிடும். அதற்கான தீவிர ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டியிருப்பதால் "வெள்ளி வீதி" அடுத்த இதழ்—நவம்பர் 10-ம் நாள்தான் வெளி வரும். அந்த இதழில் மு. கருணாநிதி எழுதும் "என்னைப் பற்றி!" என்ற தொடரோவியம் ஆரம்பமாகிறது!

உங்கள் கூடுதல் பிரதிகட்கு முன்னதாக அறிவிக்க வேண்டுகிறோம்.

நிர்வாகி, 'வெள்ளி வீதி' :: சென்னை-6.

'முரசொலி'

இலங்கை,
உள் நாடு

ஆண்டு சந்தா	6-0-0
6-மாத சந்தா	8-8-0

இப்போதுதான் புரிகிறதாம்!

“சென்னையில் வசிக்கும் நாம் ஒரு மொழி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்; இந்தி அரசாங்கத்தின் அலுவலக மொழியாகச் சட்டாயப் படுத்தப் பட்டால் நாம் மிகவும் பாதிக்கப் படுவோம்.”

❋

“ஒவ்வொரு ராஜ்யத்திலும் நிலவுகிற மொழியே அந்தந்த ராஜ்யத்தின் உத்தியோக மொழியாக இருக்க வேண்டும். ராஜ்யங்களுக்கு இடையேயும், ராஜ்யங்களுக்கும் மத்திய அரசாங்கத்தின் இடையேயும் ஆங்கில மொழியே நிலவ வேண்டும்; அதில் இந்தியைத் திணிக்கக் கூடாது.”

—இப்படி இந்த நாட்டின் மொழி நிலை குறித்துத் தன் விழிகளைத் திறந்து பார்த்து விமர்சனம் செய்திருக்கிறார், மதுரையில் ஆச்சாரியார்!

இந்தி திணிக்கப் பட்டால் தென்னாட்டவர் பாதிக்கப்படுவர்.

ஆங்கில மொழியே பொது மொழியாகத் திகழ வேண்டும்!

—மாஜி கவர்னர் ஜெனரலது வாசகங்கள் இவை!

வாழ்நாளெல்லாம் கன்னக்கோல் பிடித்துக் களவாடுவதையேத் தொழிலாகக் கொண்டு திரிந்த கடையன், சாகப் போகும்போது சொர்க்கத்தைத் தேடி ‘சங்கரா! சங்கரா!’ —என்று பகவன் நாமத்தை ஜபித்தானாம்!

அதைப்போலத்தான் இருக்கிறது ஆச்சாரியாரது செயலும்!

தன்னுடைய அரசியல் வாழ்க்கையின் வனப்புமிக்க வாலிபப் பருவத்திலே அவர் வன்னெஞ்சர்களாம் இட்லரும், முசோலினியும் சென்ற பாதையிலே பீடு நடை போட்டார்!

இந்தி கூடாது—என்று சொல்லும் அவர், அப்படி முழக்கமிட்டவர்களையெல்லாம் அன்று குடும்பம் குடும்பமாய்ச் சிறைக்கோட்டத்துக்கு அனுப்பினார்.

தள்ளாத வயதிலே பெரியார் ராமசாமியை பெல்லாரி சிறையிலே பூட்டி வைத்தார்!

தாளமுத்து, நடராசன் போன்ற வீர திலகங்களின் மனைவிமார்களுடைய தாலியை அறுத்தெறிந்தார்! முள்வேலி போட முயன்றார், முகிழ்த்தெழுந்த மொழி உணர்ச்சிக்கு!

ஆனாலும் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எமை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை—என்று சிந்துபாடியபடி சிங்கம் நிகர் தீரர்கள் காராக்கிரகம் புகுந்து மீண்டனர்!

அன்று அடக்குமுறை ஆட்சிக்கு ஆணையிட்டு மகிழ்ந்த ஆச்சாரியாரின் திருவாய், இன்றோ கட்டாய இந்தி வேண்டாமென்று முறையிடுகிறது!

அன்று தென்னகத்து பாலகர்களை நோக்கி நீங்கள் கட்டாயம் இந்தி படித்துத்தான் தீர வேண்டுமென்று கையெழுத்திட்ட ஆச்சாரியாரின் கரங்கள் இன்று மத்திய அரசாங்கத்தை நோக்கி ஆங்கிலமே இருக்கட்டும்!—என்று ஜாடை காட்டுகிறது!

வேடிக்கை!

விநோதம்!!

இட்லர் உயிரோடிருந்து; அவனது இறுதிக் காலத்திலே சமாதானத்தின் பெருமை குறித்துத் தன் சிஷ்ய கோடிகளுக்கெல்லாம் இதோபதேசம் செய்தால், எப்படியிருக்குமோ—அப்படி யிருக்கிறது ஆச்சாரியாரின் இன்றைய போக்கு!

அன்றெல்லாம் கட்டாய இந்தியை எதிர்த்து நின்ற நம்மீது காய்ந்து விழுந்த ஆரிய ஏடுகள் அத்தனையும், இன்றோ அக்ரகாரத்து முதியவரின் வார்த்தைகளுக்குத் தாளம் போடுவது போலத் தலையை அசைக்கின்றன.

சென்னை ‘தினமணி’ எழுதுகிறது:

மூன்றுகோடி தமிழ் மக்களின் அபிப்பிராயத்தையே அவர் அங்கு வெளியிட்டார். அது மட்டுமல்ல; தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசுவோரின் கருத்து வேறாக இருக்க முடியாது!

—அன்று இதே கருத்தை போராட்ட மூலம் தெரிவித்த நம்மீது நெருப்புக் குழம்பை வாரி யிறைத்த ஏடுகள் இன்று அதே கருத்தை ஆச்சாரியார் கூறும்போது பாலாபிஷேகம் பொழிய முன் வந்திருக்கின்றன.

‘ஏதேது; ஆச்சாரியாரும், அவரது தொண்டரடிப்பொடி ஆழ்வார்களும் இவ்வளவு சீக்கிரத்தில் திருந்திவிட்டார்களா?’—என்று கேட்டுவிடாதீர்கள்.

“கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இந்தியைப் புகுத்தி, மாணவர்கள் இப்போது ஆங்கிலத்தில் திறமை பெற்றிருப்பதைப்போல இந்தியிலும் திறமை பெறச் செய்வது என்பது சாத்தியமானதே. ஆனால் அப்படி ஆங்கிலத்தை நீக்குவதற்கு அதிகக் காலம் பிடிக்கும்!”

—இதுவும் ஆச்சாரியாரது வாசகங்கள்தான்!

வட நாட்டிலே உள்ள தேசியத் தலைவர்கள் இந்தி வெறியாளர்கள்!

வன வேங்கை எப்படி உடனே தன் கண்ணெதிரில் பட்ட பிராணிகளையெல்லாம் கொன்று போடுகிறதோ, அது போலவே அந்த இந்தி வெறியர்களும் நேரடியாக—அதுவும் உடனடியாக இதர பிராந்தியங்களின்மீது இந்தியைத் திணிக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆச்சாரியார் அரசியலில் எப்போதுமே தனித்து, நேர் நின்று எதிர்த்திடும் புலிக்குணம் கொண்டவரல்ல! ஆமாம், தோழர்களே! அவர் புலியல்ல; குள்ள நரி!

அதனால்தான் அவர் இந்தி இப்போது வேண்டாம்; இன்னும் சிறிது நாட்கள் சென்று இங்கு வரட்டும்—என்று அறிவுரைகூற முன் வந்திருக்கிறார்!

அந்த நரிப் பண்பு கொண்டவரின் நடிப்பு வார்த்தைகள் தான் இப்போது மதுரையில் வெளி வந்திருக்கின்றன.

உண்மையிலேயே அவர் தென்னகத்து மக்கள் மீது நல்லெண்ணம் வைத்திருப்பாரேயானால்,

இந்தி இப்போது வேண்டாமென்று சொல்லியிருக்க மாட்டார்; இந்தியே வேண்டாமென்று கூறியிருப்பார்!

—இந்த வார்த்தைகள் இதயத்தின் அடித்தளத்திலிருந்து வராதவரையில் நாம் எப்படி அவரை நம்ப முடியும்? ●

கலையும் காதலும்

❋ 5-ம் பக்கத் தொடர்ச்சி

என்ன ஈனமான செயல்! கலையை மாசு படுத்தும் கயவர்கள்’-நடனபாதம்பொருமினார்.

புகைப் படத்தை மீண்டும் பார்த்தார். நளினியின் முகத்தில், அவர் கட்டித் தழுவும் பொழுது அருவருப்பின் சாயலை இல்லையே! பயிர்ப்பு, என்னும் தன்மையே காணோமே, பரபுருஷன் கரம் பட்டும்! முல்லைப் பல் காட்டி முறுவலித்தல்லவா நிற்கிறாள்! வேதனை! வேதனை!

அவரால் பொறுக்க முடியவில்லை. காரை எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கிக் கிளம்பினார்.

வழியில், மறுநாள் மந்திரி தலைமையில் உள்ளூரில் நடக்கவிருக்கும் நளினியின் நாட்டியக் கச்சேரிக்கான விளம்பர வண்டியை ஒருவன் தள்ளிக் கொண்டு சென்றான். அந்த விளம்பரம், அங்கப்பொலிவு மிளிர, ஆடிடும் நளினியின் அழகுத் தோற்றம் ஒன்றைத் தாங்கி நின்றது. அந்தப் படத்தின் வனப்பில் ஈடுபட்டு வாலிபப் பட்டாளமொன்று அதன் பின்னே சென்று கொண்டிருந்தது!

மனைவியின் படத்தைச்சுற்றி இப்படி ரசிக மகாஜனங்கள் செல்லுவது, இப்பொழுது அவருக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை. அருவருப்பாக இருந்தது! கண்களை மூடிக் கொண்டார்; பல்லை ‘நறநற’ வென்று கடித்தார்.

‘நளின பவன்’ முன் கார் நின்றது. மான் போலத் துள்ளி வந்து, வழக்கம்போல் மணாளனை வரவேற்றாள் நளினி!

அவர் முகம் கொடுத்துப் பேசாமல் உள்ளே சென்றார்.

“என்ன அத்தான், என்றுமில்லாமல் இன்று இவ்வளவு கோபம்...யாராவது...!”

புகைப்படம் அவள் முன் வீசி எறியப்பட்டது......

அவளுக்கு ஒருவாறு விஷயம் விளங்கியது.

“நளினி, இனி நீ நாட்டியமே ஆடக் கூடாது.....நாளை ‘கலை மன்றத்தில்’ நீ ஆட விருக்கும் நாட்டியமும் ரத்தாக வேண்டும்!”

“காரண மில்லாமல்? ஏன் காய்கிறீர்கள், அத்தான்!’

“காரணம் கண்டு, அதை உனக்கும் காட்டிய பிறகு தான் கட்டளையிடுகிறேன்...”

“வீண் சந்தேகம்! நான் மேற்கொண்டிருக்கும் கலை வாழ்வு, என் பெண்மைக்குக் களங்கம் ஏற்படுத்த என்றுமே நான் அனுமதித்ததில்லை... என்னை நம்புங்கள்...”

“ஒரு வேளை நீ தூய்மையானவளாக இருக்கலாம். ஆனால் இன்றுள்ள ரசிகர்கள் உன் தூய்மைக்கு இழுக்கு விளைவிக்க மாட்டார்கள் என்பதை நான் நம்பத் தயாராக இல்லை.........நம் உறவு நீடிக்க ஒரே வழி, நீ உன் கலையை இனி மறந்து விட வேண்டும்!”

“எப்படி அத்தான் அது முடியும்? தாமரை தண்ணீரை மறப்பதும், நல்லறிவாளன் நாட்டுப் பற்றைக் கைவிடுவதும் சாத்தியமா, அத்தான்...?”

“கலையை நீ மறக்க முடியாவிட்டால், நான் உன்னை மறந்து விடுகிறேன்.........அவ்வளவுதான்...!”

“அத்தான், சற்று சிந்தியுங்கள். நாமிருவரும் கணவன்—மனைவி ஆனது எதனால்? என் கலையும், உங்களுடைய ரசனையும்தானே நம்மிருவரையும் ஒன்றாக்கியது...”

“நம் உள்ளங்களை ஒன்றாக்கிய கலை, அவைகளை வெட்டிப் பிரிக்கும் நிலையும் அடையும் என்று நான் அப்பொழுது உணராதது, முட்டாள் தனம் தான்...”

“அப்படியானால், நாளை நான்...”

“கட்டாயம் ஆடக்கூடாது!”

“மக்கள் என்ன நினைப்பார்கள்?”

“அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை...!”

“நான் ஆடினால்...?”

அவர் பதில் சொல்லவில்லை.

❋

மறுநாள் கலை அரங்கில் மந்திரியின் முன்னிலையில், நாட்டிய ராணி நளினியின் நாட்டியக் கச்சேரி விமரிசையாக நடந்தது. நளினியைப் பாராட்டி கனம் மந்திரி ‘நடன கலா சேவகி’ என்று பட்டமும் வழங்கிப் பாராட்டினார். மறுவாரம் ‘கலைமணம்’ இதழில் இந்த நாட்டியக் கச்சேரி பற்றி எந்தக் குறிப்பும் வெளிவராதது மட்டுமல்லாமல், ‘கலையும் ஒழுக்கமும்’ என்ற தொடர் கட்டுரையும் ஆரம்பமாகி இருந்தது.

சில நாட்களிலேயே, நளினி—நடன பாதம் விவாக ரத்து பற்றிய செய்தி பத்திரிகைகளில் வெளியாகிப் பெரும் பரபரப்பை உண்டாகியது. ரசிகர்கள் ஏதும் புரியாமல் ஏதேதோ, புதுப் புது வியாக்யானங்கள் செய்து கொண்டிருந்தனர்! ●

வீழ்ந்தது வீரர் கோட்டம்!

மாறன் எம். ஏ.,

பணிந்தது, பஞ்சாப் சிங்கம்!

இது மாவீரர் அணிவகுப்பு! இல்லை எனும் ஒரு வார்த்தை எம் அகராதியில் இல்லை எனக் கூறிடும் படை முகப்பு!

மலைகாணுப் பிறவிகள் அவர்களது தோள் காணலாம்.

மின்னல் பார்த்தால் கண்ணின் பார்வை கெட்டுவிடும் என அஞ்சுவோர் அந்த வீரர் கோட்டத்தின் வாள் வீச்சை இமைக்காமல்—கண் சுளிக்காமல் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்!

கருங்கல்லின் தன்மை தெரியாதார் அவர்களது உள்ள உறுதிகண்டு தெரிந்துகொள்ளலாம்!

—இவ்வாறெல்லாம் அந்த வீரர் கோட்டத்தைத் தயார் செய்து வைத்திருந்தார் ஒரு பெரியார்; ஆமாம்—வயதில் பெரியவர்!

போர் அவர்களுக்குப் பொழுதுபோக்கு! வாள் அவர்களுக்கு விளையாட்டுக் கருவி! எதிரிகளின் தலையை வெட்டுவது அவர்களுக்கு ஏந்திழைகள் முல்லை மலரைக் கொடியிலிருந்து பறிப்பது போல!

பாரெல்லாம் வியந்து போற்றியது; பார்த்தவர்கள் எல்லாம் மனம் பூரித்தனர்—இவ்வளவு பெரிய படையை வைத்துக்கொண்டு இந்தப் பெரியார் ஒருநாள் அந்த வட்டாரத்தையே தனதாக மாற்றிக் கொள்ளத்தான் போகிறார்; இன விடுதலைக்கு அவர் உரிமை முரசை ஒரு தடவையாவது முழங்கிக் காட்டத்தான் போகிறார்; பிறகு என்ன? வெற்றி அவர் காலடியில் தான்!—என்றெல்லாம் வாழ்த்துரைத்தனர்!

இந்த நேரத்திலேதான் திடுக்கிடும் செய்தியொன்று வந்தது.

வீரர் கோட்டத்தை வியாபாரப் பொருளாக நினைத்து விலை கூறிவிட்டார் பெரியார் என்ற பேச்சு மெல்லத் தலை தூக்கியது.

நம்பமுடியாத செய்தி! நடக்க முடியாத செயல்!—உள்ளன்பு கொண்டவர்கள் பலமான மனப்போராட்டத்துக்கு ஆளானார்கள்!

என்ன செய்வது; உண்மை உதய சூரியன்போல் என்றாவது ஒருநாள் உலகத்துக்குத் தெரிந்துதானே தீரும்!

ஆமாம்; உண்மைதான்! அந்தப் பெரியார் வீரர் கோட்டத்தை கோழையர் குப்பத்திற்கு விற்று விட்டது மறைக்க முடியாத மெய்தான்!

ஆகா! எப்படியிருந்தது அந்தப் பாசறைக்கூடம்! விண்ணிலிருக்கும் மீன்களை எண்ணிவிடலாம்; ஆனால் வீரர் கோட்டத்துப் படைவீரர்களைக் கணக்கிட முடியாதே! —இந்தப் பெருமையல்லவா இதுநாள்வரை அந்தப் பிராந்தியத்தில் குடிபுகுந்திருந்தது. இனி அவையெல்லாம் கனவா? அழுகிய கனியா? பழங்கதையா?

—நலிந்த நெஞ்சினராய் மாறினர் நல்லெண்ணம் கொண்டோர்!

வீரர்களையெல்லாம் வெண்டைக்காய்களாக — வெங்காயக் கூடைகளாக நினைத்து ஒட்டு மொத்தாகக் கருர் விலைக்கு விற்றுவிட்டாரே, அந்தப் பெரியார்!

வீரர் கோட்டம்—அது இப்போது கோழைகள் குப்பத்திற்குக் கையடக்கம்! அந்தோ பரிதாபம்! பரிதாபம்!!

❊

சீக்கியர் விடுதலைக்காக; அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இதுவரை இடதுசாரிக் கட்சியாக விளங்கி வந்த அகாலிதளம் ஒரு மாவீரர் கோட்டம்!

மலையே அசைந்தாலும் மனம் மட்டும் அசையப் பெறாத தாரா சிங் என்னும் பெரியார்தான் அவர்களது ஒரே தலைவர்!

காங்கிரஸ் கட்சி ஒரு சிங்கம் என்றால்; அந்த சிங்கத்தின் குகையிலேயே சென்று அதன் பிடரியைப் பிடித்து உலுக்கிய பெருமை அகாலி தளத்தைத் தான் சேரும்!

காங்கிரஸ் இயக்கம் ஒரு குரங்கு என்றால் அதைக் கோலெடுத்து ஆட்டுவித்த பெருமை அந்த தாடி வைத்த பெரியவரைத் தான் சேரும்!

—இப்படி யெல்லாம் அன்று சீறிப் பாய்ந்து, காறி உமிழத் தக்க விதத்திலே காங்கிரசை வைத்திருந்த வீரர் கோட்டமாம் அகாலிதளம்தான் அக்டோபர் 2-ம் தேதியன்று அமிர்தசரசிலே கூடி, கோழையர் குப்பமாம் காங்கிரசோடு சேர்ந்துவிடுவது—என முடிவு செய்து விட்டது!

சீக்கியர்களின் ஏகோபித்தத் தலைவராம் மாஸ்டர் தாரா சிங் என்னும் பெரியாரே இந்த ஏற்பாட்டிற்குத் தலையசைத்து விட்டார்!

பெரியார் தாரா சிங் காங்கிரஸ் கூடாரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தால் அங்கு ஒரு சாகச வீரர் காமராசர் இருந்திருக்க வேண்டுமே—என்று கேட்கத் தோன்றும்.

பஞ்சாபிலே படை வீரர்கள் நடமாடும் கழகமாக இருந்த அகாலி தளத்தை காங்கிரசின் பால் இழுத்து வந்த காமராசர் வேறு யாருமல்ல; மௌலானா அபுல்கலாம் ஆசாதே அங்கே விருதுநகரத்தார் வேலையைச் செய்திருக்கிறார்!

ஆகா! இன்று கோழையர் குப்பத்தோடு கூட்டுச் சேர்ந்துவிட்ட அந்த வீரர் கோட்டம் தான் ஒரு காலத்தில் எத்தகைய போராட்டங்களை நடத்தியிருக்கிறது தெரியுமா?

சென்ற ஆண்டு ஜூலை மாதம் மொழி வழி மாநிலம் கேட்டு அகாலியர் தொடுத்த போராட்டத்தினால் பஞ்சாப் மாநிலமே ஆட்டம் கொடுத்தது!

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வீரர்கள் காரகக் கிரத்துள்ளே பூட்டப்பட்டனர்!

அவர்களது பிரச்சார ஏடுகளான 'டெய்லி பிரபாத்'; 'டெய்லி அகாலி'; 'டெய்லி அஜீத்'; 'அகாலி பத்திரிகா' போன்றவைகளின் காரியாலயங்கள் போலிசாரால் சோதனையிடப்பட்டு [illegible] வைக்கப்பட்டன!

தாராசிங்கும்கூட சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார்! ஆமாம்; தோழர்களே! இந்தப் பெரியாரும் இதுவரை ஒன்பது தடவைகளுக்குமேல் சிறை புகுந்திருக்கிறார்!

அதுமட்டுமா? இந்தியாவுக்கு சுதந்தரத்தைத் தேடிக் கொடுத்த பிறகு காங்கிரஸ் அரசாங்கம் சிறைபிடித்த முதல் அரசியல் கைதியாக இருக்கும் பெருமை சீக்கியப் பெரியாராம் தாராசிங்கிற்குத்தான் கிடைத்தது!

இன்று காங்கிரசுடன் சேர்ந்துவிடுவது என்று தீர்மானம் போட்டார்களே; அதே அமிர்தசரஸ் நகரத்திலேதான் சென்ற ஆண்டு இதுவரை சரித்திரத்திலேயே காணமுடியாத அளவுக்குக் காங்கிரசின் பால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது!

அப்போது; அமிர்தசரசிலே காங்கிரஸ் கட்சி தனது மாநாட்டைக் கூட்டியிருந்தது.

அந்த நேரம்தான் ஆயிரக் கணக்கான சீக்கியர்கள் தலைவரின் ஆணைப்படி உருவிய வாளைக் கரத்திலே ஏந்திய வண்ணம் காங்கிரஸ்காரர்களின் பந்தலுக்கு நேராக அணிவகுத்துச் சென்றார்கள்!

பி. டி. ஐ. செய்தி ஸ்தாபனம் கணக்கு காட்டியது — அந்த அகாலியர்களது ஊர்வலம் காங்கிரஸ் மாநாட்டுப் பந்தலுடைய முகப்பு வாயிலைக் கடந்து செல்வதற்கு மாத்திரம் சுமார் நான்கு மணி நேரம் பிடித்ததாம்!

அப்படியானால் அந்த ஊர்வலம் எவ்வளவு பெரிதாக இருந்திருக்க வேண்டும்? அதில் எத்தனைத் தோழர்கள் கலந்து கொண்டிருக்க வேண்டும்?

அய்யோ! நினைத்துப் பார்க்க முடியவில்லை. அந்த மாவீரர் அணி வகுப்புதான் இன்று கோழையர் குப்பத்தோடு நிபந்தனையேதுமின்றி உறவாடுவதற்கு வெட்கமின்றிப் புறப்பட்டுவிட்டது!

அகாலிதளம் காங்கிரசோடு சேர்ந்து குலவ ஆரம்பித்தால் பிறகு அந்தப் பெயருள்ள கட்சியே கலைக்கப்பட்டுவிடுமா?—என்று கேட்டுவிடாதீர்கள்.

காங்கிரசோடு அந்த வீரர் கோட்டம் இணைந்தாலும்கூட,

❊ தொடர்ச்சி 10-ம் பக்கம்

விற்பனையாகிறது!

முத்தாரம்

★ தித்திக்கும் தீந்தமிழ்ச் சிறுகதைகள்!

★ சிந்திக்கத் தூண்டும் நுண்கலை விளக்கம்!

★ நாவலர் நெடுஞ்செழியன் தரும் 'இலக்கிய இன்பம்' சோல்லின் செல்வர் சம்பத் அளிக்கும் 'குடியரசு'!

★ கே. ஏ. பி. விசுவநாதம், கே. ஏ. மதியழகன், இளம்வழுதி, தில்லை வில்லாளன், ப. உ. சண்முகம், பி. சி. கணேசன்—முதலியோரின் அழகு எழுத்தோவியங்கள்!

★ வாணிதாசன், கருணானந்தம்—ஆகியோரின் கவிதைகள்!

★ மற்றும் மு. க.வின் கவிதை நடைச் சிறுகதை!

—இத்தனையும் கொண்ட அக்டோபர் இதழ் படித்து விட்டீர்களா?

பணிந்தது, பஞ்சாப் சிங்கம்...

❊ 9-ம் பக்கத் தொடர்ச்சி

அகாலிதளம் என்ற கட்சி கலைக்கப்படமாட்டாதாம்!

இதுவரை அரசியல் கட்சியாக இருந்துவந்த அந்தப் பெரியாரது கட்சி இனிமேல் மத — சமுதாய — கலாச்சார பிரச்சினைகளில் மட்டுமே அக்கரை கொண்ட ஒரு பிரச்சார ஸ்தாபனமாவே இயங்குமாம்!

—சீக்கியப் பெரியார் இந்திய உபகண்டத்து இடதுசாரிக் கட்சிகள் அனைத்தையுமே ஏமாற்றிவிட்டார்.

சிங்கக் குட்டிகளைத் தயார் செய்கிறார்; அதைக் கொண்டு அவர் சீக்கியரது உரிமைக் காட்டிலே கொள்ளி வைக்க வரும் தேசியக் கள்ளர்களையெல்லாம் விரட்டுவார்—என எதிர்பார்த்தவர்கள் அவரது பச்சோந்திக் கொள்கையால் ஏமாந்து விட்டார்கள்!

ஆமாம்; வீரர் கோட்டம் வீழ்ந்துவிட்டது-அல்ல; அல்ல; விற்பனை செய்யப்பட்டுவிட்டது!

உண்மைதான்! கோழையர் குப்பத்தைச் சேர்ந்தவர்கள் இன்று பஞ்சாப் பெரியாரது வீரர் கோட்டத்தை விலைக்கு வாங்கியிருக்கிறார்கள்!

அகாலிதளம் காங்கிரசோடு சேர்வது இதுவல்ல முதல் தடவை!

இதுவரை இருமுறை காங்கிரசோடு சேர்ந்து; இருமுறை காங்கிரசிலிருந்து வெளியேறியிருக்கிறது, இந்தக் கட்சி!

இப்போது ஏற்பட்டிருக்கும் உறவு மூன்றாவது தடவை!

வெட்கம்! வெட்கம்!! இரண்டு முறை சேர்ந்து; அந்த இரண்டு முறையும் பிரிந்து சென்ற ஒரு இயக்கத்தோடு கொஞ்சிக் குலவிட முயலுகிறது குவலயத்துக்கெல்லாம் பஞ்ச சீலம் தந்த காங்கிரஸ் கட்சி!

இரண்டு முறை உதைத்துத் தள்ளிய ஊதாரியை உத்தமியென்று எண்ணி முத்தமிட முன் வந்திருக்கிறார்கள் தேசியக் கூடாரத்துப் பெருந் தலைவர்கள்!

இரண்டு முறை காறிக் காறி முகத்திலே உமிழ்ந்த மூளி அலங்காரியை இன்று வாயிலே சர்க்கரையிட்டு அழைத்து வருகிறார்கள் ஒரு காலத்தில் தியாகிகளும், தீரர்களும் நடமாடியபாடிவிடாம் காங்கிரஸ் அமைப்பிற்கு!

அவமானம்! அவமானம்! யார் உதவியும் தேவையில்லை என்று விராப்பு பேசித் திரிந்த தேசியக் குப்பம் இன்று 'வீரர் கோட்டத்தை' விலைக்கு வாங்கித் தீரவேண்டிய அவல நிலைக்கு ஆளாகியிருக்கிறது.

'வீரர் கோட்டம்' மூன்றாவது முறையாக வீழ்ந்தது என்பது பற்றிக்கூட கவலைப்படவில்லை, நாம்!

காங்கிரஸ் கட்சி இவர்களையெல்லாம் பாக்குவைத்து அழைத்துத் தனது 'பவிஷை'க் காத்துக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதே—என்பதை நினைக்கும்போதுதான் இந்த உபகண்டத்து இடதுசாரிக் கட்சிகள் அனைத்துமே விலாவொடியச் சிரிக்கவேண்டியிருக்கிறது!

வடக்கே ஒரு பாஞ்சாலப் பெரியாரை இழுத்துக்கொண்டது, தேசியக் கூடாராம்!

தெற்கிலும் அதற்கு ஆவன செய்தபடிதான் இருக்கிறது!

—இப்படி ஒரு அவல நிலை ஏற்பட்டிருப்பது உண்மையிலேயே காங்கிரஸ்பீடம் ஆட்டம் கொடுத்திருக்கிறது — என்பதைக் குறிப்பதாகத்தான் நம்மால் பொருள்கொள்ள முடிகிறது! ●

பிறைவானம்...

❊ 11-ம் பக்கத் தொடர்ச்சி

தப் போலீஸ் அதிகாரியும் வெளியே சென்றார். சுந்தரியைப் பாராத வீட்டுக்காரரும் வீட்டிற்குள்ளே சென்றார்.

அப்போது...

அந்த வீட்டுக்காரரின் கடைசிப் பெண்—சிறு குழந்தை தத்தித்தத்தி நடந்தபடியே கொலுவுக்கு அருகில் வந்தது. யாரும் அங்கு இல்லை; அதைத் தடுக்கவும் முடியாது. இதுதானே சந்தர்ப்பம்! முகத்திலே மகிழ்ச்சி பொங்க தன் பிஞ்சுக் கைகளால், அந்தக் காந்தியின் பொம்மையைத் தூக்கியது. உலகில் அரும் பெரும் சாதனைகளை எல்லாம் கண்ட மேதைகளும் புரிந்து கொள்ள முடியாத ஏதோ ஒரு பாஷையில், ஏதோ உளறிக் கொட்டிக் கொண்டு நகர்ந்தது. சன்னல் பக்கம் வந்தது.

அதைப் பார்த்தாள் சுந்தரி. குழந்தையும் அவளைப் பார்த்துவிட்டது. 'என்ன வேண்டும் உனக்கு?' என்று கேட்பதைப் போல் முகத்தைத் தூக்கியது.

சுந்தரி ஏதோ துணிவுடன் தன் கையை நீட்டினாள். மறுகணம், என்ன ஆச்சரியம்! எதுவும் யோசிக்காமல், அந்தக் குழந்தை பொம்மையை சன்னல் வழியே நீட்டியது. சுந்தரி ஆசையுடன் வாங்கிக் கொண்டாள்.

அதே சமயம்...

"ஐயோ! பொம்மை! பொம்மை!!" என்ற அலறலுடன் வீட்டுக்காரர் வெளியே ஓடிவந்தார். சுந்தரி நடுங்கியே போனாள். மறுகணம் ஓட ஆரம்பித்தாள். அங்கே நின்றால், தன் கதி என்னவாகும்—என்பதை அவள் நன்கு உணர்வாளே! கையில் காந்தி பொம்மையுடன் தெருவிலே வேக வேகமாக ஓட ஆரம்பித்தாள்.

"திருடி...திருடி!......பிடி!...பிடி!............' என்று அலறிக் கொண்டே அவரும் துரத்தி ஓடிவந்தார்.

பசிவேறு; நின்று கொண்டே இருந்த களைப்பு வேறு; ஓடிய சோர்வு வேறு; என்ன நேருமோ என்ற பயம் வேறு—சுந்தரி தடுமாறினாள். அவள் தலை சுழன்றது. எதிரே சென்று கொண்டிருந்தவர்களைக்கூட அவள் கண்களுக்குத் தெரியவில்லை. ஓடிய வேகத்தில் மோதிக்கொண்டாள். மறுகணம், கையிலிருந்த காந்தியின் பொம்மை 'தடால்' என்று கீழே விழுந்தது. உடைந்தது. நொறுங்கியது. என்ன ஆச்சரியம்! மறுகணம் 'கலகல' வென்ற ஒலியுடன்—கண்ணைப் பறிக்கும் வைரக்கற்கள் உடைந்த பொம்மைக்குள்ளிருந்து நாற்புறமும் சிதறி ஓடின!

சுந்தரி நிமிர்ந்தாள். அவள் மோதியது வேறு யாருடனுமல்ல; அந்தப் போலீஸ் அதிகாரியேதான்! அதற்குள் வீட்டுக்கார பெரிய மனிதரும் அங்கு வந்து விட்டார். கீழே சிதறிக் கிடந்த வைரக் கற்களையும், அந்த மனிதரையும் பார்த்தார் அந்த அதிகாரி. உடல் முழுதும் நடுநடுங்க பீதி பரவிய முகத்துடன் தடுமாறிக் கொண்டிருந்தார் அவர். போலீஸ் அதிகாரி ஏதோ ஒரு முடிவுக்கு வந்து விட்டார்.

❊

அப்புறமென்ன? சிங்கப்பூரிலிருந்து பல ரகசிய வழிகளில் வைரங்கள் தருவித்து, கள்ள வாணிபம் நடத்தி வந்த சமூக சேவகர் கைது செய்யப்பட்ட செய்தி தெருவெங்கும், நகரெங்கும், நாடெங்கும் பெரும் பரபரப்பையே உண்டாக்கியது.

—'சொர்ணம்'

விற்பனையாளர்களுக்கு:

தயவு செய்து 'முரசொலி'—'முத்தாரம்' இரண்டிற்கும் தனித்தனியே பட்டியல் தொகை அனுப்புவதுடன், தனித் தனியே கடிதத் தொடர்பும் கொள்ள வேண்டுகிறோம்.

இணைந்து வருபவை கவனிக்கப்படும் என்பது உறுதியல்ல—என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி

தியாகராயர் கல்லூரி கட்டிட நிதிக்காக

கலை விழா

சென்னை, வண்ணையம்பதி

தியாகராயர் கலாமண்டபத்தில்

நாள்தோறும் மாலை 6-மணிக்கு நடைபெறும்.

12-10-56 வெள்ளி சாயி, சுப்புலட்சுமி—நடனம்

13-10-56 சனி எம். ஜி. ராமச்சந்திரன் நாடக மன்றத்தின் "அட்வகேட் அமரன்"

14-10-56 ஞாயிறு அறிஞர் அண்ணா தலைமையில் 'இன்பக் கனவு'

15-10-56 திங்கள் சூரிபாபு, இராஜேஸ்வரி குழுவினரின் "தாரா சசாங்கம்" (தெலுங்கு)

கட்டணம்: தினசரி:— ரூ. 5, 3, 2, 1, அணா 8.

பிறைவானம்

கொலுப்பொம்மை

"அந்த வீட்டிலும் கொலு வைப்பார்கள் என்று நம்பவே முடியவில்லை. அந்த வீட்டுக் குடையவரோ மிக மிக நல்லவர்; இளகிய மனம் படைத்தவர்; நல்ல கொள்கைகளில் 'இரும்புப் பிடி' கொண்டவர்; காந்தீய பக்தர்; காந்தி இறந்த தினத்தன்று, "ஆ" என்று ஏங்கி மயக்கம் போட்டே விழுந்து விட்டாராம்; சுதந்திர தினத்தன்று, தவறாமல், ஏழை மக்களுக்கு உணவும், உடையும் கொடுப்பாராம்! — இப்படி அவரை புகழ்ந்த ஊர் மக்கள், அவரை 'சமூக சேவகர்' என்றுதான் அழைப்பார்கள்.

"சமீப காலமாக புராணக் குப்பைகளையும் அவர் இகழ்ந்து வந்தார்; கடவுள் என்ற பெயரால் கோயில்களுக்குக் கொட்டியழும் பணத்தை, நடமாடும் தெய்வங்களாம்—நலிவு பெற்றோருக்கு செலவழித்தால் என்ன? — இப்படிக்கூட துணிந்து ஒரு மேடையில் பேசி விட்டாராம். தீபாவளியன்று பணத்தை தீயாக்குபவர்களையும் கண்டித்திருக்கிறார். அவரே இப்போது தன் வீட்டில்—தவறு; மாளிகையில் கொலு வைத்திருக்கிறாரா? என்ன அதிசயம்? மண் பொம்மைகளைப் பணம் கொடுத்து வாங்கி, அதை அடுக்கிவைத்து வேடிக்கை பார்ப்பதில், என்னதான் பொல்லாத இன்பம் இருக்கிறது?"

—இப்படி எண்ணிக் கொண்டே, உயர்ந்து எழும்பி நின்ற 'தொண்டன் இல்லம்' என்ற அந்த மாளிகையின் வாசலில் இருந்த சன்னல் வழியாக உள்ளே பார்த்தாள் சுந்தரி.

வண்ண விளக்குகள் கண்ணைப் பறிக்க, விலையுயர்ந்த பொம்மைகள் கொலு வீற்றிருந்தன. சுந்தரியின் கண்களில் எங்கிருந்தோ மகிழ்ச்சி ஓடி வந்து புகுந்தது.

அவள் சிரித்தாள், நீண்ட நாட்களுக்குப் பிறகு! அதற்கும் தடையா என்று கேட்கிறீர்களா? ஆமாம்; அவள் மட்டுமல்ல; அவளைப் போன்ற கோடானு கோடி பேர் சிரிக்கவே முடியாதபடி வாய்க்கு பலமான பூட்டல்லவா போட்டிருக்கிறது, பொல்லாத வறுமையும், வாழ்வுக்கு வழி காட்டாத பஞ்சமும்!

"அடாடாடா! என்ன அழகான பொம்மைகள்! உண்மையான உருவங்கள் போலவே இருக்கின்றனவே சார்!..."— கொலுவைக் காண வந்திருந்த ஒருவர் இப்படி வீட்டுக்காரரைப் புகழ்ந்து கொண்டே வெளியே வந்தார்.

"இருக்காதா சார்? இந்த பொம்மைகள் எல்லாம் என்ன, இங்கு செய்ததா? நல்ல கதை, சிங்கப்பூரில் ஒரு வெள்ளைக்காரன் கம்பெனியே இருக்கு சார். அதுக்கு 'ஸ்பெஷல் ஆர்டர்' கொடுத்தல்லவா செய்தேன்! இன்னைக்கு காலையிலேதானே கப்பலிலேயிருந்தே எடுத்து வந்தேன்... எனக்கு இதெல்லாம் பிடிக்கவே பிடிக்காது! வீட்டிலே பெண்களுக்கெல்லாம், என்னத்தைப் பள்ளிக்கூடம் போனாலும், அதெல்லாம் புரியுதா? ...."

என்று தேனொழுகப் பேசிக் கொண்டே அந்த சமூக சேவகரும் கூடவே வந்தார்.

வாசலுக்கு வந்ததும் அவரை வழியனுப்பிவிட்டுத் திரும்பினார். அப்போது தற்செயலாக சன்னல் ஓரத்தில் நின்று கொண்டிருந்த சுந்தரியைப் பார்த்து விட்டார்.

அவரது பார்வையிலே என்ன கோரத்தைக் கண்டாளோ, சுந்தரி நடுங்கினாள்; பின் வாங்கினாள்!

"யாரது? பிச்சைக்காரக் கழுதை! இங்கென்ன வேலை உனக்கு?......ம்......" என்று உறுமினார் அந்த மனிதர்.

"இல்லே ...... பொம்மை ...... கொலு........பார்க்க........"— சம்மந்தமில்லாமல் ஏதேதோ உளறினாள் சுந்தரி. கண்களால் பார்த்து மகிழவும் முடியாது போய்விட்டதே என்ற கவலை அவளுக்கு! என்ன செய்வது என்ற குழப்பம்...அப்போது...

"ஹலோ மிஸ்டர்! என்ன, சௌக்கியமா?" என்ற கம்பீரமான குரல் ஒன்று எழும்பியது. பக்கத்துத் தெருவிலே குடியிருந்த போலீஸ் அதிகாரி ஒருவர்தான் தன் குடும்ப சகிதமாக அங்கே வந்து கொண்டிருந்தார்.

அவரைக் கண்டதும் கண நேரம் தடுமாறினார் வீட்டுக்காரர். "ம்...வாங்க...வாங்க! நீங்க வரலியேன்னு நெனைச்சுக்கிட்டிருந்தேன்.........சரி......" என்றார். போலீஸ் அதிகாரி வந்த கவனத்தில் சுந்தரியை மறந்து விட்டாரோ, என்னவோ—வந்தவர்களை உபசரிக்க உள்ளே நுழைந்தார்.

இவர்தான் அன்புள்ளம் கொண்டவரோ — என்று முணு முணுத்தபடியே சன்னல் வழியாக கொலுவைப் பார்த்தாள், சுந்தரி.

அதிலே இருந்த ஒரு பொம்மை—எல்லாவற்றிலும் தனித்து நின்ற ஒரே ஒரு பொம்மை — அவளை மிகவும் கவர்ந்தது.

சேலைகளைச் சுமந்துகொண்டு ஆலமரத்திலே அமர்ந்திருந்த சின்னக் கண்ணனின் பொம்மையல்ல அது!

பெரிய மலையொன்றை இரு கைகளிலும் தூக்கிக்கொண்டு பறக்கும் அனுமார் பொம்மையுமல்ல!

சின்னஞ் சிறிய மூஞ்சூரின் மேல் சவாரி செய்து வருவாரே பிள்ளையார், அந்தப் பொருந்தாத பொம்மையுமல்ல!

பெருத்த தொந்தியும், பருத்த உடலும் கொண்ட மார்வாடி பொம்மைகூட அந்தச் சின்னத் தங்கைக்குச் சிரிப்பைத் தரவில்லை!

அவை யெல்லாம் அக்கிரமத்தை—அநியாயத்தை — அறிவுக்குப் பொருந்தா படுநாசத்தை விளக்கும் பொம்மைகளல்லவா? ஆனால், அவளைக் கவர்ந்ததுதான் என்ன? இந்த கெட்ட கூட்டத்துடன் சேர்ந்திருப்பது கேவலம் என்ற நினைப்போடோ, என்னவோ, கொலு அடுக்கின் கடைசித் தட்டில், கோடியில் நின்று கொண்டிருந்த காந்தியாரின் பொம்மைதான் அவளைக் கவர்ந்து விட்டது.

மூக்குக் கண்ணாடி — இடையிலே ஒரு முழத் துண்டு— அதில் அசைந்தாடும் கடிகாரம்—இந்தக் கோலத்தோடு கையிலே கம்பூன்றி, எங்கேயோ கண்ணுக்கு எட்டாத அமைதியான தனி உலகத்தை நோக்கி, நீண்ட பயணம் துவங்கி விட்டதைப் போல நடந்து செல்லும் நிலையில் உள்ள பொம்மை அது!

ஆமாம்; அந்த அமைதியான உருவம்தான் அவளைக் கவர்ந்து விட்டது.

என்றோ ஒரு நாள்...யாரோ ஒரு பிச்சைக்காரக் கிழவர் காந்தியைப் பற்றி அவளுக்கு ஏதோ சொல்லியிருக்கிறார்.

அன்று காந்தி பிறந்த நாள். அலங்கார ரதம் செய்து, அதிலே காந்தியின் சிலை வைத்து, மேள தாளத்துடன் தெருவிலே பெரிய தோர் ஊர்வலம் சென்றது. அதைக் கண்டு வியந்த சுந்தரி, "என்ன சாமி தாத்தா, அது?" என்று கேட்டாள்.

பக்கத்திலிருந்த கிழவரோ, "அவர்தான் காந்தி! இந்த நாட்டு விடுதலைக்குப் போராடியவர்; மிகவும் நல்லவர்! உன்னையும் என்னையும் போன்ற ஏழைகள் இந்த நாட்டிலே இருக்கவே கூடாது என்று நினைத்தவர்; அதுக்காகவே தானும் ஏழையைப் போலவே மாறியவர்! அவர் சாமியல்ல சுந்தரி! ஆனால் இன்று அவருடைய சீடர்களோ, அவரைக் கடவுளாக்கினார்கள்; அவரது கொள்கைகளை புராணப் பதிகங்களாக்கி ஏட்டிலேபுதைத்து விட்டார்கள்!..." என்று விளக்கினார்.

சுந்தரி வாயடைத்து நின்றாள். "உன்னையும் என்னையும் போன்ற ஏழைகள் இந்த நாட்டிலே இருக்கவே கூடாது என்று நினைத்தவர்!" என்ற சொற்கள் அவள் காதிலே திரும்பத் திரும்ப ஒலித்த வண்ணம் இருந்தன.

அவருடைய பொம்மை ஒன்று தனக்குக் கிடைக்காதா என்று அவள் அன்று நினைத்தாள். பட்டுச் சொக்காயும், தங்க வளையலும், ஒரு காந்தி பொம்மையும் வைத்து, 'எது வேண்டும், உனக்கு?' என்று கேட்டால், பாய்ந்தோடி எடுத்துக் கொள்வாள் காந்தி பொம்மையை!

சுந்தரியின் கண் முன்னே காந்தியின் பொம்மை தோன்றியதும் அந்த நெடுநாளைய ஆசை மீண்டும் தலை தூக்கியது. இவ்வளவு பொம்மைகளுக்கு உரியவரான வீட்டுக்காரர் அந்த ஒன்றை மட்டும் தனக்குத் தர மாட்டாரா? நினைத்துப் பார்ப்பதும் தவறாயிற்றே என்று வெட்கினாள்.

இருள் சூழ்ந்து கொண்டே வந்தது. சுந்தரி நகரவேயில்லை. கொலுவிற்கு வந்தவர்கள் ஒவ்வொருவராக சென்று கொண்டிருந்தனர். எல்லோரும் சென்ற பின், கடைசியாக அவ்

❀ தொடர்ச்சி 10-ம் பக்கம்

கேள்விப் பக்கம்

மணிவண்ணன்; சென்னை.

(?) சாதாரண மனிதன் எப்போது தத்துவ ஞானியாகிறன்?

வயிறு சூன்யமாகும்போது!

(?) மனிதனுக்கு உரிமையுணர்ச்சி எப்போது ஏற்படுகிறது?

தென்னகத்தில் அதற்கு இன்றும் கூட பஞ்சம்தான், தோழரே!

கே. எஸ். மணியம்; நாகர்கோயில்.

(?) எடை குறைந்தவர்கள் எப்படி கனமாக முடியும்?

பதவி கிடைத்தால்!

(?) காங்கிரசுக் குள்ளேயே ஒரு எதிர்க்கட்சி வேண்டுமென்று சொல்லியிருக்கிருரே, ஆச்சாரி யார்?

ஆமாம்; இப்போது மட்டுமென்ன—காங்கிரசுக்குள் ஒரு கட்சியா இருக்கிறது!

பழ. கருணைக்கண்; சத்திரக்குடி

(?) சிறு துரும்பும் பல் குத்த உதவுமாமே?

ஆனல் நேருவுக்குப் பக்கத்திலிருக்கும் தேபர்ஜீ எதற்கும் உதவுவதில்லையே!

சேரலாதன்; தஞ்சை.

(?) பெரியார் ஏன் வடக்கெல்லைப் போராட்டத்தை எதிர்க்கிருர்?

ஏனெனில் அந்தப் போராட்டத்தை அவர் நடத்தவில்லையே; அதனுல்தான்!

மு. க. வண்ணன்; கவண்டம்பட்டி.

(?) ஒரு நிலை பெற்ற ஆட்சிக்கு பண பலம்; படை பலம்; பகுத்தறிவு பலம்—இவைகளில் எது முக்கியம்?

இப்போதுள்ள தேசியத்தார் ஆட்சிக்கு கடைசியில் குறிப்பிட்ட பலம் கிடையாது. இதிலிருந்தே நல்ல ஆட்சிக்கு எது தேவை என்பதைத் தெரிந்து கொள்ளலாமே, தோழரே!

(?) கழனியில் களை எடுப்பதற்கும் காங்கிரசில் களை எடுப்பதற்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா?

நிறைய உண்டு; காங்கிரசில் களையெடுப்பது என்பது கள்ளிக் காட்டிலிருந்து முள்ளை அகற்ற முயற்சிப்பது போல—பைத்தியக்காரச் செயல்!

(?) முக்காலத்தையும் உணர்ந்து கொள்ள காட்டில்தான் தவம் செய்ய வேண்டுமா?

தவறு! காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் அதன் முக்காலத்தையும் தெரிந்து கொள்ள இவ்வளவு சிரமப்பட வேண்டியதில்லை, நண்பரே!

(?) உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமா? அல்லது உழவன் நிலக்கிழாருக்குச் சொந்தமாக்கப்பட வேண்டுமா?

மொத்தத்தில் உழவர்; நிலக்கிழார்-இந்த இருவருமே காங்கிரசுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டும் என்பதுதான் காமராசரின் விருப்பம்!

ஏ. காளிச்சாமி; மதுக்கரை.

(?) கோவில் இல்லா ஊரில் ஏன் குடியிருக்க வேண்டுமென்று கூறுகிருர்கள்?

அர்ச்சகர்கள் பிழைக்க வேண்டாமா?—அதனுல்தான்!

ந. சுப்ரமணியன்; பி. கே. பாளையம்.

(?) வருகிற பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் தோற்றுவிட்டால்?

ஒன்றும் குடி முழுகிவிடாது! பிரிட்டனில் நடந்த சென்ற பொதுத் தேர்தலில்கூட தொழிற் கட்சி தோற்று விட்டது. அதனுல் அந்தக் கட்சி அழிந்தா விட்டது!

கு. ப. சாமி; கோவை.

(?) நேருவுக்குப் பின்னர் அவரைத் தாக்கக்கூடிய குருஷேவ் ஒருவர் காங்கிரஸ் கட்சியில் இந்தியாவில் தோன்றுவாரா?

நேருவுக்குப் பின்னர் என்ன; அவர் உயிரோடிருக்கும்போதே காங்கிரசில் குருஷேவ்கள் தோன்றிவிட்டனர்! உதாரணமாக ஆங்கிலத்தை அவசரப்பட்டு அகற்றிவிடக் கூடாதென்று சென்ற மாதம் பண்டிதர் அறிவித்தாரல்லவா? உடனே உத்தர பிரதேசத்திலுள்ள இந்தி வெறியர்களான சில காங்கிரஸ் பிரமுகர்கள் பகிரங்கமாகக் கூட்டம் போட்டு நேருவைக் கண்டித்து விட்டார்களே!

நவம்பர் முதல் நாள் விற்பனைக்குக் கிடைக்கும்!

'ரங்கோன் ராதா'

[வசனப் புத்தகம்]

விலை 8 அணு

விற்பனைக் கழிவு 40 சதவீதம்

தேவையான பிரதிகளுக்கு கழிவு நீக்கி முன்பணம் அனுப்பி இப்போதே பதிவு செய்து கொள்ளவும்.

முரசொலி பதிப்பகம், :: சென்னை 6.

மகளிர் மன்றம்--வேண்டுகோள்

பேரன்பு கெழுமிய தாய்மார்களே! தோழியர்களே! உங்கள் அனைவர்க்கும் எங்கள் அன்பு நிறைந்த வணக்கம். மனித சமுதாயத்தின் பெரும் பகுதியினராகிய பெண்கள் சமூகத்தை, உறக்க நிலையிலிருந்து தட்டி எழுப்புவதற்காகவும், சாதிமத வேறுபாடின்றி அவர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பணியாற்றுவதற்காகவுமே இம்மன்றம் 21—8—56 அன்று சென்னையில் துவக்கப்பட்டிருக்கிறது; தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இதன் கிளைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. நூற்றுக் கணக்கான தோழியர்கள் இதன் உறுப்பினர்களாகச் சேர்ந்து வருகிருர்கள். பல பத்திரிகைகள் இதன் அமைப்பைப் பாராட்டி வரவேற்று வாழ்த்துதல் தெரிவித்திருக்கின்றன.

எந்தெந்தத் துறைகளில் எப்படியெப்படி பணியாற்றினுல் மாதர் குலம் விழிப்புற்றெழுந்து வீரநடை போடமுடியுமோ அந்தத் துறைகளிலெல்லாம் ஈடுபட்டு அரும்பணியாற்ற மன்றம் முடிவு செய்திருக்கிறது. கல்வியறிவை அளிக்க இலவச வகுப்புகள் நடத்துவது, பொது மன்றங்களில் சொற்பொழிவாற்றப் பயிற்சிகள் தருவது, தையற்கலை நுணுக்கங்களை சொல்லித் தருவது, தவறிய பெண்களுக்கு வாழ்வளிப்பது, வாசகசாலைகள் நடத்துவது, நூல் நிலையங்கள் அமைத்துப் படிக்கும் பழக்கத்தை மேன்மேலும் வளர்ப்பது, பல அறிஞர்களைக் கொண்டு திருக்குறள், புறநானூறு, அகநானூறு முதலான தமிழ் இலக்கியங்களை மாதர்கள் கற்றுப் பயனடைய வழி செய்வது, குடும்பக் கட்டுப்பாடு, சமுதாய முன்னேற்றப் பணிகள் புரிவதற்கான பயிற்சி அளிப்பது, நாட்டின் விடுதலைப் பணிகளில் ஆதரவுதர மன்றம் முடிவு செய்து செயல்புரியத் தொடங்கியிருக்கிறது. இன்னும் என்னென்ன பணிகளில் ஈடுபட்டால் மகளிர் குல முன்னேற்றம் விரைவில் உருவாகும் என்பதைத் தாங்கள் அன்பு கூர்ந்து தெரிந்தால் அவற்றையும் எண்ணிப் பார்த்து தக்க முறையில் பணியாற்ற மன்றம் தயாராக இருக்கிறது.

தாங்களும் தங்களுடைய தோழியர்களும் அன்பு கூர்ந்து இந்த மன்றத்தின் உறுப்பினர்களாகி இதனை மேலும் மேலும் வளர்த்தால் மன்றம் மேலும் பல தொண்டுகள் செய்வதற்கு எளிதாக இருக்கும் என்பது எங்கள் கருத்து. மன்றத்தில் தாங்கள் தவருமல் உறுப்பினராகி மன்றப் பணிகளில் பங்கேற்குமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கிருேம்.

வணக்கம்.

செயலாளர்கள்:

வெற்றிச்செல்வி அன்பழகன்,
புவனேசுவரி நடராசன்.

தலைவர்:

சத்தியவாணி முத்து.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6.